மாதர்மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII.	Madras: June 1910.	No-6.
புத்தகம் - கஉ.	சென்னப்பட்டணம்: மேமீ 1910.	இலக்கம்-6.

குழந்தைகளும் தாய்மார்களும்.

நமது தேசத்தில் குழந்தைகளைச்சரிவர போஷித்து வரவும் நன்றாய் நடத்திவரவும் அநேக கல்வி யறிவில்லாத தாய்மார்களுக்கும் தகப்பன்மார்களுக்கும் தெரிகிறதில்லை. குழந்தை சௌக்கிய மாயிருக்கும்பொழுது அதன்விளையாடல், மழலைச்சொல் முத லியவைகளைக் கண்டும் கேட்டும் ஆனந்திக்கிறார்கள். குழந்தை வியாதியால் வருந்தும்பொழுதோ இன்னது செய்வதென்று தெரியாமல் விசனப்படுகிறார்கள். பின் வைத்தியருக்குக் குழந்தையைக் காண்பித்து ஏதோ ஔஷதங்களை வாங்கிக்கொடுக்கிறார்களே தவிர வியாதிவராமல் தடுக்கத்தகுந்த பிரயத்தனங்களைச் செய்வதேயில்லை. இதுமுதல் தப்பு. குழந்தைகள் பேச ஆரம்பிக்கும்பொழுது கெட்டவார்த் தைகளை அவைகளுக்குச் சொல்லிக்கொடுக்கிற வழக்கம் முற்றிலும் நீங்க வில்லை. இப்படிச்செய்வதால் குழைந்தகள் அதிசீக்கிரத்தில் அவ்வார்த்தை களை உச்சரித்துச்சொல்ல ஆரம்பிக்கின்றன. இது இரண்டாவது தப்பு.

மேற்கூறிய இரண்டு முக்கிய விஷயங்களை நமது மாதர்களும் பெண் மணிகளும் கவனித்து தங்கள் குழந்தைகள் நல்லவர்களாயும் தேகாரோக்ய முடையவர்களாயு மிருக்கும்படி அவர்களைப் பழக்கியும் போஷித்தும் வர முயலவேண்டும். குழந்தைகளைத் தாய்மார்கள் அடிக்கவே கூடாது. பயத்தா லும் நல்லவார்த்தைகளாலும் நடத்திவர வேண்டும். [பயத்தால் என்ற பொழுது அடிக்கடி குழந்தைகள் பயப்படும்படி செய்யக்கூடாது.]

தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் பால் உண்ணும் காலம்வரையில் அதிகப்பத்தியமா யிருந்துவர வேண்டும். அப்படியிருந்தால்தான் குழந்தை களின் தேக சௌக்கியம் சரியாயிருக்கும். பத்தியமின்றி கண்டதைப் புசித் துவந்தால் குழந்தைகளுக்கு வியாதியுண்டாகும்; குழந்தைகள் மண், சாம் பல் முதலியவைகளைத் தின்னவொட்டாமல் பார்த்துக்கொண்டு வரவேண் டும். அப்படிச் செய்யாவிடின் குழந்தையின் வயிற்றில் கட்டி உண்டாகும்.

அப்பொழுது தாய்மார்கள் படுந்துயரத்திற் களவேயில்லை. ஆகையால் உடனே நல்ல வைத்தியருக்குக் குழந்தையைக் காண்பித்து மருந்து கொடுக்கவேண்டும்; அலட்சியமா யிருக்கக்கூடாது. குழந்தைகளுக்கு தண்ணீரில் விளையாட மிகப்பிரிய முண்டாகும். இதைத்தடுக்க தாய்மார்கள் முயன்று வரவேண்டும், அவைகளின் எண்ணம் விளையாட்டில் செல்லும்படி செய்ய வேண்டும். இதற்காக நல்ல மரப்பொம்மைகள், கப்பல், ரயில்வண்டி, சிறிய பாத்திரங்கள் முதலியவைகளைக் கொடுத்து விளையாடச் சொல்லவேண்டும், சிறியசதுரம் போன்ற கட்டைகளைக் கொடுத்து கோபுரம், வாராவதி, அடுப்பு, வண்டி, வீடு, முதலியவைகளைக் கட்டிக் காண்பித்து அவர்களையும் அவ்விதமே செய்யும்படி உற்சாகப் படுத்தவேண்டும்.

பலவர்ண புஷ்பங்கள், பந்து, முதலியவைகளைக் கொடுத்தும் விளையாடச்செய்தால் மிகநலமே; குழந்தைகள் இவ்விதம் செய்துவந்தால் பலமுள்ளவைகளாக யிருக்கும், சுறுசுறுப்பும் அதிகப்படும், புத்தியும் விசாலப்படும். பக்ஷிகள், மிருகங்கள் முதலியவைகளைக் காட்டிக்கொண்டு வரவேண்டும். அவைகளின்மேல் குழந்தைகளுக்கு அன்பு, இரக்கம் முதலியவைகள் வரும்படியாக அடிக்கடிஅவைகளுக்குத் தானியங்களைப் போட்டுக்காட்டவேண்டும்

தினம் பகவானை ஸ்துதிசெய்யும் பொழுதும் வீட்டில் பூஜை நடக்கும் பொழுதும் குழந்தைகளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். இவ்விதம் செய்துவந்தால் குழந்தைகளுக்கும் பக்தி உண்டாகும். "கடவுளை நமஸ்கரிக்க வேண்டும், தினம் ஈஸ்வரனைப் பூஜிக்கவேண்டும்" என்ற எண்ணமு முண்டாகும். சுசியாயிருக்கவும் வெகு சுலபமாக போதிக்கலாம்; எப்பொழுதாவது நமது கையிலோ, காலிலோ, முகத்திலோ அழுக்கிருந்தால் குழந்தைகளுக்குத் தெரியும்படியாக அவ்வழுக்கைத் துடைத்துக்காட்ட வேண்டும். அவ்விதமே குழந்தையினுடைய காலில் அழுக்கிருந்தால் நாம் உடனே உலர்ந்த துணியையெடுத்து துடைக்கவேண்டும்; இவ்விதமே பற்பல நல்ல விஷயங்களைச்செய்தும் போதித்தும் வரலாம்.

வீரத்தன்மையுள்ள ஸ்திரீ ரத்தினங்கள்.

டக்காவிலுள்ள நாராயண கஞ்சியில் சரளாதேவி, சபோலதேவி என்ற இரண்டு பிராமண குலத்தைச் சேர்ந்த மாதர்கள் தங்கள் வீட்டில் நித்திரை செய்துகொண் டிருக்கும்பொழுது நடுநிசியில் ஒரு துன்மார்க்கன் இவர்களுடைய கற்பையழிக்க துர் எண்ணங்கொண்டுவந்தானும். தமயந்தியைப் போன்ற இம்மாதர்கள் அத்துன்மார்க்கனைக் கொன்றுவிட்டார்களாம். உடனே இவர்கள் பிடிக்கப்பட்டு விசாரிக்கப் பட்டார்கள். அப்பொழுது இவர்கள் தைரியமாய் உண்மையை நடந்தவண்ணம் உரைத்தார்களாம்.நாராயண கஞ்சு டிபுடி மாஜிஸ்ட்ரேட் இவர்களை டெக்காவிலுள்ள செஷன் கோர்ட்டுக்கு முழுவிசாரணை செய்து தண்டிக்க அனுப்பிவிட்டார். கவர்ன்

மெண்ட் வக்கீல் சங்கதியை நன்ருய் அறிந்துகொண்டு இவர்கள்மீது குற்ற மொன்றுமில்லே. இந்தக்கேசை நீக்கி விடதங்கள் உத்திரவை எதிர்பார்க்கின்றேன் என்று செஷன் ஜட்ஜியுடன் சொல்லவே அவர் உத்திரவளித்து இவ்விரண்டு ஸ்திரீ ரத்தினங்களைப் புன்சிரிப்புடன் குற்றவாளிக ளல்லவென்று சொல்லி அனுப்பிவிட்டார்களாம்.

எட்டாவாவில் வசிக்கும் மாலதிதேவி சரஸ்வதி என்றமாது மேமீ 11வ யன்று அக்ஷய திருதியி யாகையால் ஜம்னுநதிக்கு ஸ்னானம் செய்யப் போனுள். அப்பொழுது இம்மாதுடன் மற்ருெருமாதும் தனது நான்கு குழந்தைகளுடன் சென்ருள். இவள் குழைந்தைகளில் மூத்த குழந்தைக்கு வயது - 8. இவர்கள் நதியில் ஸ்னானம் செய்தபின் அக்கரையில் (தமாஷா) வேடிக்கை நடந்ததைப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது எட்டுவயதுள்ள ராமசந்திரன் தண்ணீரில் முழுகிப் போய்விட்டான் என்று ஒரு ஸ்திரீ அழுவதை மாலதிதேவி கேட்டு, தனக்கு நீந்தத்தெரியாம லிருந்தும் ஒரு உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்ற பெருத்த எண்ணத்துடன் நதியில் குதித்து பையனைப் பிடித்துக்கொண்டாள். ஆயினும் இவளுக்கு நீந்தத்தெரியாதாகையால் இவளையும் அப்பையனையும் வெகுதூரம் ப்ரவாகம் இழுத்துக் கொண்டுபோயிற்று. அச்சமயம் நீந்துவதில் சாமார்த்தியம் பொருந்தியசிலர் இவ்விருவர்களைக் கண்டு இவர்களிடம் நீந்திச்சென்று இவர்களைப் பத்திரமாய் கரைசேர்த்தார்களாம். அப்பொழுது மாலதிதேவி அப்பையன் கையைப்பிடித்த வண்ணமாயிருந்த போதிலும் பிரக்ஞை யற்றிருந்தாளாம். உடனே வைத்தியர் வரவழைக்கப்படவே இவர்களுக்குத் தக்கமருந்து கொடுத்து இவர்களுக்கு பிரக்ஞை வரும்படி செய்தார்.

சென்றவருஷம்வங்காளத்தில்(Bengal)ஒரு இந்துமாதுரயிலில்போய்க் கொண்டிருக்கும் பொழுது தனது குழந்தை அகஸ் மாத்தாய் வெளியில் விழுந்துவிடவே தானும் வண்டியினின்று வெளியே தன் உயிரைக் கவனியாமல் தன் அருமையான குழைந்தையின் உயிரைக் காப்பாற்ற குதித்துவிட்டாள். பின்பு தாயும் குழந்தையும் சௌக்கியமாய் யாதொரு காயமின்றி கண்டு எடுக்கப் பட்டார்கள். ஆனல் இதில்தாயார் தன் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற இவ்விதம் உடனே செய்யும்படிநேர்ந்தது. முன் சொல்லிய திலோ அப்படியில்லை. மாலதிதேவி அயலாருடைய குழந்தையின் உயிரைக் காப்பாற்ற தன் உயிரைக்கூட மதிக்காமல் வீராவேசத்துடன் நதியில் குதித்தாள். இந்தியாவோ ஐசுவரியத்தில் ஏழையா யிருந்தபோதிலும் மாலதிதேவியைப் போல் இன்னும் அநேக புத்திரிகளைப் பெற்று ஐசுவரிய முடையதாயிருக்கும்படி கடவுள் கிருபைசெய்வாராக.

கடலும் அதன் உபயோகங்களும்.

கடலைக்குறித்துக் கூறுங்கால் சதாரணமாய் அதை 'நீர் வனுந்தரம்' என்று சொல்வதுண்டு. ஆனல் இது பெரும் பிழை. சமுத்திரமானது உபயோகமற்றதாகவும் வனுந்தரமாகவும் இருப்பதற்குப் பதிலாக நிலப்பாகமா

னது உபயோகமற்றதாகவும் வனாந்தரமாகவும் இருப்பதைத் தவிர்த்துச் செழிக்கச்செய்கின்றது. உலகத்திற்கு அழகையும், சுகத்தையும், க்ஷேமத்தையும் விளைவிப்பது சமுத்திரமே; சமுத்திரமில்லாவிடில் கண்ணுக்கினிய புல் பூண்டுகளெல்லாம் வாடிவிடும்; அடர்ந்த காடுகளெல்லாம் சுத்த மணற்றரையாய்விடும்.

ஊர்வன, நகர்வன, நடப்பன முதலிய எல்லா ஜீவராசிகளுக்கும், மரம் செடி, புல், பூண்டு முதலிய எல்லா தாவரவர்க்கங்களுக்கும் காற்றானது எப்படி இன்றியமையாததோ அப்படியே ஜலமும் இன்றியமையாதது; ஜலம் கடலினின்று தானுண்டாகின்றது. அநேக ஆறுகள் கடலையடைவதுபோல், கடலினின்றும், மேகமாகின்ற ஆறுகள் பெருக்கெடுத்து வானோக்கிச் செல்லுகின்றன. மேகங்களுக்கும் ஆறுகளுக்கும் சமுத்திரமே பிறந்த அகமாகும். மழைமாரி முதலியவும் அதினின்றே உற்பத்தியாகின்றன. ஆகையினால் சமுத்திரமானது ஜீவராசிகளுக்கெல்லாம் உணவையூட்டிப் போஷிக்கும் தாயை ஒத்திருக்கின்றது.

நம்மைச்சுற்றிலும் கடலின் தோற்றமும் அதன் விஸ்தீரணமும் அதன் வன்மையும் விளங்குகின்றது. தோட்டங்களில் புஷ்பங்கள் புஷ்பிக்கிறதும் பழங்கள் பழுக்கிறதும் மாரியினாலல்லவா? வயல்களில் தானியங்கள் பயிராவதும், புல் நுனிகளினின்றும் நீர்த்துளிகள் காலில் படுவதும், மழையின் அனுக்கிரகமல்லவா? கடல் நீரல்லவோ சூரியனது வெப்பத்தினால் நீராவியாகக் கிளம்பி மாரியாகப் பொழிகின்றது?

"கைம்மாறு வேண்டாக டப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ வுலகு".

நமக்கு உணவையும் உடையையும் உண்டாக்கி யளிப்பது கடலே; கோடைக்காலங்களில் ஆதித்தனது அக்கினியைத் தணிப்பதும் சமுத்திரமே; மாரிக்காலத்தில் குளிரைக்குறைப்பதும் கடலே. அதன் அலைகளினின்றே நமக்கும் நம் சந்ததிகளுக்கும் பொருளை ஈட்டிவைக்கிறோம்.

கடலானது விளை நிலமாயில்லாமற்போனாலும், நிலத்தில் விளையும் பயிர்களுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கின்றது. அதன் நீரானது உப்புக்கியாழமாய் வாயில் வைக்கவொட்டாத வண்ணமாய் இருப்பினும் அதினின்றும் உண்டாகும் மேகங்கள் இனிய தெள்ளிய நீர்த்துளிகளைச் சொரிகின்றன. அதன் ஜலம் உவர்ப்பாயிருந்தாலும், மணல்வெளிகளில் இளநீரைப்போன்ற இனிய நீரையுடைய ஊற்றுகளை யுண்டாக்குகின்றது.

பூமிக்கு க்ஷேமகரத்தை விளைவிப்பதும் கடலே. சமுத்திரமில்லாவிடின் அசுத்தங்களும் கெட்ட ஜலமும் எங்கே தங்கும்? உலகத்திலுள்ள கெட்ட அசுத்தங்களையெல்லாம் சமுத்திரமன்றோ நீக்கிவிடுகின்றது. காற்றையும் கடல் சுத்திசெய்கின்றது. விஷக்காற்றுக்களெல்லாம் கடல்முகமாய்ச்சென்று, பாவம் திரக் கங்கையில் ஸ்நானம் செய்வதுபோல், தங்கள் விஷம் ஒழிவதற்காகச் சமுத்திரத்தில் தோய்ந்து பரிசுத்தமாகி இன்பமான கடற்காற்றாக மாறி நிலத்தை நோக்கி வீசுகின்றன.

பார்ப்பதற்குக் கடல் ஒரு வேலைக்கும் உபயோகப்படாதது போலிருப்பினும் உலகத்திலே மனுஷனுக்காக ராக்ஷஸபலத்துடன் எவ்வளவோ உபகாரம் செய்கின்றது. இயந்திரங்களையெல்லாம் சுழலச்செய்வது சமுத்திரமல்லவா? நூல் நூற்கிறதும் துணிநெய்வதும் கடலே; இரும்பின் மேல் வேலைசெய்வதும் கடலே; மலையைத் தொளைப்பதும் கடலே; சுரங்கங்களிலிருந்து கரியையும் பொன்முதலிய லோகங்களையும் வெட்டி யெடுப்பதும் கடலே; புகைவண்டியை ஓடச்செய்வதும் கடலே. மனிதனுலாகாத கஷ்டமான காரியங்களையெல்லாம் சித்திபெறச் செய்வது கடலே.

கடலின் கண்ணே கப்பலில் யாத்திரை செய்யும் போதாவது கடற்கரையில் நின்றுகொண்டாவது பார்க்கும்போது வானமும் அதனைப்பிரதிபிம்பிக்கும் சமுத்திரமும் எவ்வளவு அழகாய் புலப்படுகின்றன! உதயத்திற்குமுன், இந்திரவில்லின் நீலநிறம்போன்ற அழகியகிரணங்கள் பளிச்சென்று தென்படுகின்றன. சிறிது நேரத்திற்குள் ஆதித்தன் குணதிசையில் தோன்ற வானெல்லாம் சுடரொளி பெற்றுப் பத்தரை மாத்துத்தங்கம்போல் விளங்குகின்றது. சூரியோதயமான பின்பு, ஆகாயத்தில் ஆதித்தன் எழுவதைப்பார்த்தால் அக்கினிகோளமொன்று கடலினின்று கிளம்பி ஆகாயகமனம் செய்வதுபோல் தோன்றும். சூரியஸ்தமன வேளையில் மேற்றிசையில் சூரியன் அஸ்தமிப்பதும், அதற்கெதிராகக் கீழ்த்திசையில் சந்திரன் உதயமாவதும் இவ்விருவின் சுடர்களையும் ஏககாலத்தில் காண்பதும், இவற்றின் கிரணங்கள் அலைகளிற் பட்டுப் பிரகாசிப்பதும் எவ்வளவோ அற்புதமா யிருக்கும். அந்திப் பொழுதாய் இருட்டிப் போனபின்னர் ஆகாயத்தில் மப்பு மந்தாரமில்லாமல் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கும்போது கண்டுகளிக்க ஆயிரங்கண் வேண்டும். கப்பலானது அலைகளின் நடுவே கடலைக்கலப்பைக் காறுபோலப் பிளந்துகொண்டு செல்வதும், அவ்வாறு செல்லும்போது அதன் இருபுறமும் வெண்ணுரை அபிரிமிதமா யெழுந்து விளங்குவதும் வெகு அழகாயிருக்கும். கடலோரத்தில் அலைகள் நீல மலைகள்போல் கிளம்பிப் புரண்டு விழும்போது எதிரலையோடு மோதுவதும் வெண்ணுரையுண்டாய்ப் பிரகாசிப்பதும் மறுபடியும் கிளம்பிப் புரண்டுவிழுவதும் காணக்காண இன்பமாயிருக்கும். இன்னும் கடல் கோஷிப்பதின் இனிமையையும் கீதத்தையும் சொல்லவும் முடியுமா? எவ்விதமான மனக்கவலையையும் துன்பத்தையும் மறக்கடித்து விடுமென்னுமுண்மை அனுபவித்தவர்களுக்கே தெரியும்.

☞ ஜி. தாமோதர முதலியார், பி-ஏ.

கோபம்.

கோபமாவது மிகவுங் கெடுதியை விளைவிக்கும் ஓர் தீயகுணம். அது சிலரிடத்தில் அதிகமாகவும் சிலரிடத்திற் குறைவாகவு மெல்லோரிடத்திலுமிருக்கின்றது. எங்களுக்கு யாராவது ஓர் தீங்கைச் செய்துவிட்டால் முதல் உண்டாவது கோபமே. கோபம் வந்தவுடன் எங்களுக்குப் பேசத்தகுவதெது, பேசத்தகாதது எதென்றுந் தெரியாமல் வாயில்வந்தவைகளெல்லாவற்றையும் சொல்லி ஏசுவோம்.

"மறத்தல் வெகுளியை யார்மாட்டுந்தீய பிறத்தலத னான்வரும்" என்று திருவள்ளுவநாயனாரும் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனரன்றோ, ஆதலால் நாங்கள் யாவர்மேலும் வெகுளியை யொழிதல் வேண்டும். எங்களில் வலியார்மேல் வெகுளுவோமாயின் அது எங்களுக்கே தீதாய்முடியும், குறைந்தவர்கள்மேல் வெகுளுதலுங்கேடே. கோபத்தைத் தடுத்தற்குப் பொறுமையே முக்கியகாரணம். கோபத்தினால் உலகத்தில் விளைந்திருக்கும் நட்டங்களிற் கோரளவு பிரமாணமில்லை. எத்தனையோ ராஜாக்கள் தங்களுடைய காதல் மனைவியரையும், மற்றஞ்சாமானிய ஜனங்களையுந் தங்களுக்குச் சடுதியிலெழுந்த கோபத்தினால் வாளுக்கிரையாக்கி யிருக்கின்றனர். உலகத்திலெழும் வழக்குகளில் அதிகமானவைகளில் முக்கியகாரணமிதே. அறியாத் தன்மையுள்ள ஜனங்கள் தங்களுடைய கண்ணின் மணிபோன்ற அருமையானபிள்ளைகளை அவர்கள் சிறுவர்களாயிருக்கும்பொழுது, பிசகாய்நடத்துவதனால் குரூரப் பிள்ளைகளாக்கி விடுகின்றனர். பிள்ளைகள் சிறுவர்களாயிருக்கும்பொழுது அவர்களைக் குரூரமாய் நடத்துவதனாலும், அவர்களுடன் நியாயயீனமாய்க் கோபிப்பதாலும், அவர்களும் கோபமுள்ளவர்களாயும் வந்துவிடுகின்றனர். கோபமுள்ளவன் உலகத்தி லதிகமா யுயரமாட்டான். அவனுக்கு ஏறக்குறைய எல்லாரும் பகைவர்களா யிருப்பார்கள். அதனாலே யதிகமான காரியங்களிற் சித்தியடையமாட்டாமல் நட்டமே யடைவான். அவனுடைய முகத்தி லதிகமாகத் துக்கமே குடிகொண்டிருக்கும். சரீரசுகமும் அவ்வளவு நன்றாயிராது. அத்துடன் அவன் ஒவ்வொரு காரியத்திலும் தன்னைத் தானே கவனிப்பவனா யிருப்பான். பிறர் நமக்கு ஓர் தீங்கைச் செய்துவிட்டால், அல்லது நியாயயீனமாகத்தான், ஏசிவிட்டாலும் நாங்க ளதற்குப் பதிற் றீங்கு செய்யாமல், அவர்களுக்கு மேலும் நன்மைகளையே செய்து, வெட்கத்தினா லவர்களை யுணரப்பண்ணல்வேண்டும். ஆனாலவ்வளவு மனப்பொறுமையுடை னதிகமாக யொருவரும் நடக்கமாட்டார்கள். கோபத்தினால் மனிதர்எவ்வளவோ மனவைராக்கிய மடைகின்றனர். மனவைராக்கியத்தினால் தங்களுடைய சரியொத்த பிறவியாகிய மானிடர்க்கும், இன்னுந் தங்களிற் கீழ்ப்பட்ட பிராணிகளுக்கும், எவ்வளவோ செய்யத்தகாத இம்சைகளையுஞ் செய்கின்றனர். ஆதலினால் கோபம் இப்பிறவியில் தீங்கையும், ஒற்றுமை யீனத்தையும் விளைவிப்பதுடன், மறுபிறப்பிற்கும் நரகத்திற் கேதுவாயிருக்கின்றது. நாங்களோவ்வொருவரும் இக்கோபமென்னும் விலங்கிலிருந்து எங்களை நீக்கமுயலல்வேண்டும்.

☞ எஸ். ராஜம்மாள்.

கெரோஸின் எண்ணெய்.

நம் குழந்தைகள் எழுதும் கற்பலகையைப்போல் மெல்லிய பாளம், பாளமாகப் பெயர்த்து எடுக்கக்கூடிய கற்பாறைகள் பல பூமியின் அடிப்பாகத்தில் உண்டு. அப்பேர்ப்பட்ட பாளப் பாறைகளிற் சில, எண்ணெய்ப் பசை உள்ளவைகளாயும், அதனால் அவை விளக்கைப்போல் நின்று எரியக் கூடியனவாயும், இருப்பதை இங்கிலாந்துதேசத்து மான்சஸ்டர் ஜில்லாவின் ரசாயன சாஸ்திரிகளிற் சிலர் 1847ளு த்தில் கண்டறிந்தார்கள். பின் அவற்றை நன்றாய்ச் சோதித்ததில் அவற்றிலிருந்து விளக்கு எரிக்க உதவும்

எண்ணெய் எடுக்கலாம் என்பதை ஒரு நிபுணன் அறிந்தான். இப்படி, பாறைகளிலிருந்து எடுத்த எண்ணெய்க்கு, கிரீக் பாஷையில் பாறையென்றே அர்த்தங்கொண்ட பெட்ரோலியம் எண்ணெய் என்று பெயரிட்டார்கள்.

பின் சில காலத்துக்கெல்லாம் வட அமெரிக்காவின் பென்ஸில்வேனியா ஜில்லாவில் தண்ணீருக்காக, கிணறுகள் வெட்டினபோது அவைகளில் ஊறிய தண்ணீரில் பெட்ரோலியம் எண்ணெய் கலந்திருக்கக் கண்டார்கள். அதன் பின் தனி எண்ணெய்க் கிணறுகள் தோண்டலானார்கள். அதற்காக யந்திரங்களைக்கொண்டு பூமியில் முப்பத்தாறு அடி ஆழம் உள்ள தொளைபோட்டு அதிலிருந்து ஊறிவரும் எண்ணெயை எடுத்து அதை விளக்கு எரிக்க உபயோகிக்க லானார்கள். அப்போது அது அதிகம் கிடைக்கவில்லை.

இப்போது இந்த எண்ணெய் அனேக இடங்களில் ஏராளமாய் அகப்படுகிறது. இப்போதுள்ள எண்ணெய்க் கிணறுகளில் சில 2000 முதல் 3000 அடிவரையில் ஆழ முள்ளவைகளாய் இருக்கின்றன. இவ்வளவு ஆழத்திலிருந்து எண்ணெய் சில சமயங்களில் மேலே உயரக் கிளம்பி வீசும். என்றாலும் இந்த எண்ணெய் வெகு ஏராளமாய்க் கிடைக்கும் இடங்கள் இரண்டே. அவற்றில் வட அமெரிக்காவின் ஒரு பாகமாகிய யுனைடெட்ஸ்டேட்ஸ் ஒன்று. மற்றது ஐரோப்பாக் கண்டத்துள்ள ருஷியாதேசம். இந்த இரண்டில் அமெரிக்கா எண்ணெயே அளவில் மிகுதியாயும் குணத்தில் சிறந்ததாயும் இருக்கிறது. உலகத்தில் எடுக்கும் எண்ணெயில் 100-க்கு 63-பங்கு அமெரிக்காவிலேயே எடுக்கப்படுகிறதாம். அமெரிக்காவில் இந்த எண்ணெய் வியாபாரக் கூட்டத்தில் முதலாளியும் முக்யஸ்தனும் ஆனவன் ஒரு கோடீஸ்வரன். அவனால் நடத்தப்படும் கம்பெனிக்கு "ஸ்டாண்டார்ட் ஆயில் கம்பனி" என்று பேர்,

இந்த எண்ணெயை, பூமியிலிருந்து எடுத்தவுடன் அப்படியே விளக்கில் ஊற்றி எரிக்க முடியாது. விளக்கெரிக்க அதைச் சுத்தம்செய்யவேண்டும். அப்படிச் சுத்தம் செய்தான எண்ணெய்க்குத்தான் கெரோஸீன் எண்ணெய் என்றுபேர். இந்த கெரோஸீன் என்றவார்த்தை கேரோஸ்(மெழுகு) என்னும் கிரேக்க பாஷைப்பதத்திலிருந்து வந்தது. நல்ல கெரோஸீன் எண்ணெய் சுத்த ஜலத்தைப்போல் தெளிவாயும், எந்த நிறமும் இல்லாததாயும் இருக்கும்.

இப்போது கெரோஸீன் எண்ணெய் சர்வசாதாரணம். கிராம ஸ்திரீகளும் இந்த எண்ணெயை வாங்கிக்கொண்டு போகச் சந்தைக்குக் கண்ணாடிக் குப்பியொன்று எடுத்துக்கொண்டு அதை வீசிவீசி நடப்பதைப்பார்க்கிறோம். சிறுசந்தைகளில்உள்ள கடைகளில் சில கெரோஸீன் எண்ணெய்க் கடை. பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்களும் பெரிய கடையில் ஒரு தகரக்குப்பி எண்ணெய் வாங்கி அதைச் சந்தையில் சில்லரையில்விற்கிறார்கள்.

இந்த எண்ணெயை இடத்துக்கிடம்கொண்டுபோவதற்குப் பலசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன. கிராமாந்தரங்களுக்குத் தகரக் குப்பிகளில் போகிறது. ரயில்வந்து தங்கும் இடங்களுக்கு, அதற்கென்று ஒரு தனி வண்டியிருக்கிறது; அது மற்ற சாமான் வண்டிகளுடன் சேர்த்துக் கொண்டுபோகப்படுகிறது. ஏன்! அந்த எண்ணெய்க்கென்றே தனி கப்பலும் உண்டாம்.

இப்படி அது எளிதில் நமக்குக் கிடைத்தாலும் அதை நாம் வெகு ஜாக்கிறதையுடனேயே உபயோகிக்க வேண்டியிருக்கிறது. கெரோஸீன் எண்ணெய் வெகுசீக்கிரம் தீப்பற்றி எரியக் கூடியது. இதனால் இது பலசமயங்களில் வெகு மோஸத்திற்கு இடமாய்விடுகிறது. இதை உபயோகிப்

பதில் நாம் வெகு ஜாக்ரதையா யிருக்கவேண்டியது அவசியம். பொதுவாய் கெரோஸீன் விளக்குக்கு எண்ணெய் ஊற்றுவது இரவில்கூடவே கூடாது. இரவில் ஊற்றுவது ஆபத்துக்கிடமாகும். அதிலும் அந்தச் சமயத்தில் பக்கத்தில் கெரோஸீன் தகரக் கைவிளக்கு இருந்து விட்டாலோபோதும். ஒரு வேளைலங்காதகனம் ஆனாலும் ஆகும். கெரோஸீன் எண்ணெய்விளக்குக்குச் செய்யவேண்டிய-அதைத் துடைத்தல், அதற்கு எண்ணெய் ஊற்றல் முதலிய-எல்லாச் சடங்குகளையும் பட்டப்பகலிலேயே செய்துவைப்பது வெகு நல்ல வழக்கம் ஆகும்.

☞ கோவை. வீ. சிதம்பர உபாத்தியாயர்.

இனியமொழி கூறல்:—ஆஸ்திகன் கதை.

கலியுகாரம்பத்தில் ஜரத்காரனென்னும் ஓர் முனிபுங்கவர் வெகுகாலம் பிரஹ்மசாரியாயிருந்தார். அவருக்குச் சந்தான மின்மையின் அவரது பிதிர்க்களெல்லாம் நரகத்தில் வீழ்வதாயிருந்தது. இதையறிந்த ஜரத்காரன் தக்ஷகன் மகளான ஜரத்காரியை மணந்தான். அவளுக்கு ஆஸ்திகனென்னும் ஒரு குமாரன் பிறந்தான். இக்குழந்தை வளர்பிறைமதியம்போல் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்துவந்தான். அப்பொழுது ஜனமேஜயனது தந்தையான பரிக்ஷித்து சர்ப்பத்தால் கடியுண்டு காலகதியடைந்தனன். ஜனமேஜயன் கோபமுற்று உலகத்திலுள்ள சர்ப்பங்கள் எல்லாவற்றையும் அழிக்கவேண்டி சர்ப்பயாகம் செய்துகொண்டிருந்தான். அநேக சர்ப்பங்கள் இந்தயாகத்தில் மடிந்தன. அப்பொழுது சர்ப்பவம்சம் முழுவதும் அழிகின்றதேயென்னும் சிந்தையினால் தக்ஷகன், தன் தௌகித்திரனாகிய ஆஸ்திகனிடம் போந்து, ஜனமேஜயனை இந்த வேள்வியை நிறுத்தும்படி வரங்கேட்கச்சொன்னான். ஆஸ்திகனும் அவ்வாறே ஜனமேஜயனது யாகசாலைக்கேகி அவனெதிரே நின்றுகொண்டு மகாராஜா, நீ வெகு தர்மிகன்; தர்மசீலர்களாகிய பாண்டவர் வம்சத்திற் றோன்றியவன்; நின் கீர்த்தி மூவ்வுலகத்தும் வியாபித்துளது; பரோபகாரசிந்தையுடன் ஏழைகளின் கஷ்டங்களைப் போக்கடித்துக்கொண்டிருந்தாய்; நின் வேள்வி இந்திரனது நூறுயாகத்துக்குச் சமானமானது; தேவப்பிராமணர்கள் திருப்தியடைந்தார்கள்; உலகத்தில் பரோபகாரத்தின் மிக்க அறம் இன்று; நீதிசாலியாகிய உனக்கும் உன் பிரஜைகளுக்கும் சுபமுண்டாகுக" என்றார். அப்பொழுது சுந்தரவடிவுள்ள அவ்விளங்குமாரன் சாந்தமுகத்துடன் நிதானமான பஞ்சமஸ்வரமன்ன செவிக்கினிமைப்படுமாறு பேசியதற்குச்சந்தோஷித்து, "ஐயா பிரஹ்மசாரீ, நின்னுரைகளைக் கேட்டு நின்மீது எனக்குப் பிரேமை ஜனிக்கின்றது. நினக்கு வேண்டியதைக்கேள்" என்றான். ஆஸ்திகர் ஒ சக்கிரவர்த்தீ, இச்சர்ப்பயாகம் இத்துடன் முடியவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள் என்றான். அரசன் 'நின் வாக்கியப்படிச் செய்கின்றேன்' என்று வேள்வி முற்றுவித்தான். அப்பொழுதநேகர் இந்தயாகம் இத்துடன் நின்றால் தோஷமாகுமென்றார்கள். ஸத்தியஸந்தனான ஜனமேஜயன் அவர்கள் மாற்றங்களைப் பொருட்படுத்தவில்லை. இனிய வசனங்களால் தன்மாதாமகன் வம்சத்தைக் காத்தான். ஆகையால் எப்பொழுதும் கர்ணாநந்தமாய் உரையாடவேண்டும்.

சர்வஜித்.

25-வது அத்தியாயம்.

அநங்கனும் ஸர்வஜித்தும் அநந்தகிரியின் இருட்டறையில் பேசிக்கொண்டிருந்தபோது, மலைக்கோட்டையில் இரு சகோதரர்களும் வேறு ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் பேசியதை சுருக்கமாய் இங்கெடுத் தெழுதுவோம்.

தமையன் தம்பியிடத்தில் தங்களிருவருக்கும் வயதாகிக்கொண்டுவரக் கலியாணஞ் செய்துகொள்ளாம லிருப்பது ஒரு பெருங் குறையென்றும், அவர்கள் அடிக்கடி செய்யும் போர்களில் இருவரும் உயிரை யிழக்கக் கூடுமாதலால் அவர்களுடைய சந்ததி நசித்து விடுமென்றுஞ் சொல்லவே, தம்பி மறுமொழியாக தமையன் சொல்வது உண்மையானாலும், பக்கத்துத் தலைவர்கள் அவர்களுடைய பெண்களை தங்களுக்குக் கொடுக்க யோசிப்பது தெரிந்த விஷயமாயிருக்க, என்ன செய்யலாம் என்றான்.

"அப்பொழுதே லீலாவதியை இங்கு தூக்கிவந்திருந்தால் இந்த விசாரமெல்லாம் வேண்டாமே. நானாகிலும் நீயாகிலும் அவளை விவாகஞ்செய்துகொண்டு சுகித்து இருக்கலாமே. அந்தப்பயல் ஸர்வஜித் நமது ஏற்பாட்டைக் கெடுத்துவிட்டான். நாம் அவனைப் பழிவாங்குவதற்குப் பதிலாக, சிலதினங்களுக்குள் நியாயாதிபதிகள் அவனை யமலோகத்திற் கனுப்பிவிடுவார்கள்" என்று களிப்புடன் குண்டகேலன் சொன்னான்.

"இப்பொழுதுதான் என்ன குடி முழுகிப்போய்விட்டது? ஸர்வஜித்தோ அடைபட்டிருக்கிறான். மற்றெல்லோரும் படுத்துறங்குவார்கள். நாம் நம்மாட்களில் பதினைந்து பதினாறு பேர்களைக் கூட்டிக்கொண்டு புறைக்கடை வாயில் வழியாக அநந்தகிரிக்குள் நுழைந்துவிடலாம். அங்கே ஒரே ஒரு காவலன்தான் இருப்பான். அவன் கைகால்களைக்கட்டி வாயில் துணியையடைத்து நாம் உள்ளே சென்று லீலாவதியைத் தூக்கிக்கொண்டு வந்து விடலாமே" என்றான் கார்த்தவீரன்.

"ஆ, இதல்லவோ நல்லயோசனை. சரி அப்படியே செய்வோம். இப்பொழுது இராவுமணி பத்து. நாம் அநந்தகிரியைச் சேருவதற்குள் மணி பன்னிரண்டாய் விடும். நமது காரியத்திற் கனுகூலமான நேரமே," என்று சொல்லி இருவருமெழுந்து தங்களாட்களைச் சேகரிக்கச் சென்றார்கள்.

இது இப்படியிருக்க, பிரபு அநங்கனுடைய இரு வேவுகாரர்களுடன் பள்ளத்தாக்கைச் சுற்றியுள்ள தேய்ந்த பாதையின் வழியாய் நாலுகால் பாய்ச்சலில் குதிரையை விட்டுச் செல்லுகிற ஸர்வஜித்தின் பின் செல்லுவோம்.

லீலாவதியால் நன்மனதோடு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு மார்க்கத்தை தான் அனுசரிப்பதாக நம்பின போதிலும், அவளது இஷ்டத்திற்கிசைந்து நடப்பதில் தன் கௌரவத்தையும் மானத்தையும் பரித்தியாகஞ்

செய்து, என்று மழியாத அபகீர்த்தியை சம்பாதிக்கிறதாக நொந்து கொண்டிருந்த மனதால் உணர்ந்தான். இப்பிரபஞ்ச சுகங்களில் எண்ணிக்கையற்றவைகளை லீலாவதியுடன் அநுபவிக்கலாமென் றெண்ணியிருந்தவன் ஏக்கமென்னும் மையிருளான சமுத்திரத்தில் அமிழ்த்தப்பட்டான். அவ்விருளில் தன்னைத்தேற்றி நம்பிக்கையைக் கொடுத்து மனோதைரியத்தைத் தரக்கூடிய ஒரு சிறு கிரணத்தைக் கூட ஸர்வஜித் காணவில்லை. அவன் கொண்ட நம்பிக்கைகளெல்லாம் நிர்மூலமாய்விட்டன. லீலாவதி கைக்கெட்டாதபடி இழக்கப்பட்டாள்; அவள் எழுதிய சீட்டானது தன்னுடைய வாழ்க்கை என்னும் மரத்தை வேரறுத்துக் கீழேசாய்த்துத் தள்ளிவிட்டது. "ஓ தெய்வமே! நீ என்மேல் கொடுமையாய் இருந்தாலும், நான் லீலாவதியிடத்தில் ஆரம்பம்முதல் அந்தியம் வரையில் ஒரே உறுதியான ஆஸக்தியோடும், அன்போடும், தயையோடும் இருப்பேன். இப்போது நம்பிக்கைகளனைத்தும் நசித்துப் போனபோதிலும், இனி லீலாவதி எனக்குக் கிட்டாதபோதிலும், அவளுடைய திருப்திக்காகவே, இதோ உயிருக்கு மேலான நல்ல பெயரையும் இழந்து, கண்டவர்கள் என்னை கொலையாளியென்றும், உபகாரத் துரோகியென்றும், அயோக்கியனென்றும் சொல்ல இடங்கொடுத்து ஊரை விட்டோடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே குதிரையை விரட்டிச் சென்றான்.

இப்படி ஸர்வஜித்தும் வேலையாட்களும் தென்கிழக்காய்ச் செல்ல, தங்களை நோக்கி எதிராய் வருவதாய்த் தோன்றின குதிரைக்காலடி சப்தத்தைக் கேட்டார்கள். அடிக்கடி மறைந்து மங்கலாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்த நிலவு வெளிச்சத்தில் அக்கிங்கடமான பாதையில் இவ்வளவு வேகமாய்ச் சென்றால், எதிரே வருகிறவர்களோடு மோதிக்கொள்ளக்கூடுமென்று அஞ்சி, வேலையாட்களிருவரும் குதிரையை நிறுத்தும்படி ஸர்வஜித்தை மன்றாடிக் கேட்டுக்கொண்டும், அவன் ஒரே முரட்டுத்தனமாய் சிறிதும் கவலையில்லாதவன் போல் காற்றாய்ப் பறந்து சென்றான். அதன் பயன் என்னவயிற்றென்றால், அப்பாதை திரும்பும் ஒரு மூலையில் ஸர்வஜித்தும் அவன் ஆட்களும் பதினைந்து பதினாறு குதிரையாட்களின் மத்தியில் திடீரென் றகப்பட்டுக்கொண்டார்கள். இப்படி திடீரென்று இருகக்ஷியாரும் எதிர்பாராதபடி ஒருவரையொருவர் தாக்க, எல்லோரும் தங்கள் குதிரைகளை கடிவாளங்களால் பிடித்திழுத்து நிறுத்தினார்கள்.

"காட்டு ராஜாக்கள் அல்லவா?" என்று ஸர்வஜித்தின் ஆட்கள் ஆச்சரியத்துடன் கத்தினார்கள். "லீலாவதியைத் தூக்கிச்சென்ற துஷ்டனல்லவா?" என்று ஸர்வஜித் சடையனைப் பார்த்துக் கத்தினான். "அடா, ஸர்வஜித்தா?" என்றான் சடையன். இதைக்கேட்ட சகோதரர்கள் ஆச்சரியத்தை யடைந்தார்கள். ஏனெனில், ஸர்வஜித் அநந்தகிரியில் அடைபட்டிருந்ததாக எண்ணியிருந்தார்கள். நமது கதாநாயகன் அக்கூட்ட மத்தியிலிருந்து வெளியேவரக் குதிரையைத் திருப்பினான்; அதற்குள் குண்டலீலன் அவன் கையைக் கெட்டியாய் பிடித்துக்கொண்டு, "சிறுவனே, நாம் இப்போது அவ்வளவு சுலபமாய்ப் பிரியப்போகிறதில்லை. என்னாட்களிடமிருந்து சீமாட்டி லீலாவதியை மீட்டினவன் நீயல்லவா?" எனவே ஸர்வஜித் "உன்னிட மிருந்துகூட அப்படியே செய்திருப்பேன்" என்று சொல்லி வெகு சாமார்த்தியமாய் கையைத் திமிறிக்கொண்டு குதிரையைத் தட்டிவிட்டு வெளியேவந்து விட்

டான். "நீ அகந்தை கொண்டவன். உன்னைத் தண்டிக்கிறேன் பார்," என்று குதிரையை ஸர்வஜித்தை நோக்கித் தட்டிவிட்டான். ஸர்வஜித் உரையிலிருந்து வாளை உருவி, "நீ மாத்திரம் என்மேல் கையைப்போடு, உன்னைத் தரையில் படுக்கவைக்கிறேன்" என, மற்றவன், "இம்மீசை யில்லாப் பயல் பேசுகிறதைப் பாருங்களடா! வெகு சண்டைகளில் ஜயங்கொண்டவன் போலல்லவோ பேசுகிறான். அடே பயலே, இதோ பெற்றுக்கொள்" என்று ஸர்வஜித்தின்மேல் அடிக்கடிக் கத்தியை ஓங்கவே, அதை ஸர்வஜித் மஹா சாமர்த்தியமாய்த் தடுத்துவிட்டான். இதற்குள் காட்டாட்களனைவரும் தங்கள் எஜமானருடைய உதவிக்கு விரைந்து செல்ல, கார்த்தவீரன் அவர்களைத் தடுத்து, "நீங்கள் வரவேண்டாம். என் தமையனும் ஸர்வஜித்தும் யுத்தஞ் செய்யட்டும். அவர்கள் சண்டையில் நீங்கள்பிரவேசிப்பது அநீதம்" எனவே அவர்களும் நின்றுவிட்டார்கள்.

நிலவு வெளிச்சத்தில் இருவரும் சாமர்த்தியமாய் சண்டை செய்தார்கள். ஸர்வஜித் இயல்பாகவே தைரியமுள்ளவன்; இப்பொழுது அவன் இருந்த மனோ நிலையில் உயிரைத் திருணமாய் எண்ணினான். துர்தசையிலிருந்த அவனுக்கு தன்னைக்காத்துக் கொள்ளவேணுமென்ற நினைவே கிடையாது. சிலவாரங்களுக்குமுன், தன்னுயிருக்குமேலான லீலாவதியை அவமானஞ் செய்த துஷ்டனை தண்டிப்பதில் தன்னுயிரை இழப்பது மேன்மையிலும் மேன்மை; தான் அவளிடத்தில் வைத்த அன்பிற்கு அழியாத அடையாளம் என்றெண்ணினான்.

குண்டகீலன் ஸர்வஜித்தை சுளுவாய் ஜயித்துவிடலா மென்றெண்ணியிருந்தான். கார்த்தவீரனோ அச்சிறுவனை ஒருபொருட்டாயெண்ணி தன் தமையன் அவனுடன் சண்டைபோடுவது அவன் கௌரவத்துக்கும்சௌரியத்திற்கும் தாழ்ச்சியென்றும், பரிகாசத்தைவெளிக்காட்டுகிற முகக்குறியுடன் சும்மா நின்றுகொண்டிருந்தான். ஆனால் முதல் நாலைந்து அடிகள் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டவுடன், பையன் இலேசானவனல்லவென்பதையும், ஆயுதப்பிரயோகத்தில் மிக்க சாமர்த்தியமுள்ளவ னென்பதையும் குண்டகீலன் கண்டுகொண்டான். ஆகையால் முன்னுள்ள அலக்ஷியத்தைவிட்டு ஸர்வஜித்தோடு ஜாக்கிரதையாகவே சண்டைசெய்தான். இப்படி ஒருபொட்டு இரத்தங்கூட சிந்தாமல் இருவரும் பத்து நிமிஷங்கள் சமமாய் சண்டைசெய்தார்கள். ஒருவருக்கொருவர் சளைக்கவில்லை. இப்படி ஸர்வஜித் தன்னுடன் சமமாய் சளைக்காமல் போர்செய்வதால், தன்னுடைய கீர்த்தி ஒவ்வொரு நிமிஷமும் குறைந்துகொண்டு வருவதைக் கண்டு அடங்காக் கோபங் கொண்டவனாய், குண்டகீலன் அச்சிறுவனை ஒரே அடியால் அடித்துக் கீழேதள்ள எண்ணி குதிரையைக் கொஞ்சம் பின்னால் விட்டு பிறகு தன் கால் முள்ளுகளை குதிரையின் விலாவில் பலமாய்ப் பாய்ச்சவே, அது ஸர்வஜித்தின்மேல் பாய்ந்துகொண்டு வந்தது. காட்டுத்தலைவனது கருத்தையறிந்த நமது கதாநாயகன் வெகு சாமர்த்தியமாய் தன்குதிரையை ஒதுக்கிக் கொடுத்து, தன் கத்தியை ஆகாயத்தி லொருதரம் சுழற்றி குண்டகீலன் கத்தியிலடித்து அதை அவன் கையிலிருந்து பிடுங்கி எட்டி எறிந்துவிட்டான். உடனே தன் கத்தியின் நுனியைப் பிடித்துக்கொண்டு தனது முழு பலத்துடன் பிடியால் குண்டகீலன் தலையில் ஓங்கி யடிக்கவே. அவன் மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டான்.

ஆனால் இமைப்பொழுதில் கார்த்தவீரனும் மற்றாட்களும் வேகமாய் ஓடிவந்து ஸர்வஜித்தைச் சூழ்ந்துகொண்டார்கள். நமது கதாநாயகனோ சிறிதும் பின்வாங்கவில்லை. தன்னுயிருக்குத் தடுக்கமுடியாத அபாயம் வந்துவிட்டதென்பதை நன்றாயறிந்தபோதிலும், தன்னால் கூடியமட்டும் சண்டை செய்துகொண்டே மடியவேண்டுமென்ற மனோ உறுதியுடன் எதிரிகளின் வருகையை உருவின கத்தியுடன் எதிர்பார்த்து நின்றான். இப்படியிருக்கக் கார்த்தவீரன், "யோசனையில்லாத பையனே, இதையெல்லாம், நீயே தலையில் வாங்கி விட்டுக்கொண்டாய்," என்று சொல்லி கத்தியை ஓங்கி தலையைக் குறிப்பிட்டு அடிக்க, ஸர்வஜித் அவ்வடியை தன் கத்தியில் வாங்கிக்கொண்டான்; அடுத்த நிமிஷம் ஸர்வஜித்தின் கத்தி கார்த்தவீரன் வலது கையை நன்றாய்க்குத்திவிடவே, அவன் ஆயுதம் கையிலிருந்து நழுவிவிழுந்துவிட்டது.

ஸர்வஜித்தினுடைய ஆட்கள் இதுவரையில் சண்டையைப் பார்த்துக்கொண்டு சும்மா நின்றுகொண்டிருந்தார்கள்; ஆனால் அவர்கள் கோழைகள் அல்ல. கார்த்தவீரன் கத்தியைப்பிடிக்கத் திராணியில்லாமல் செய்யப்பட்டவுடன், அவனுடைய மற்றாட்கள் ஸர்வஜித்தைச் சூழ்வதைக்கண்டு, இவ்விருவரும் அவனுக்கு உதவிசெய்ய ஓடினார்கள். மலையதிபதிகள் இருவரும் ஸர்வஜித்தை யெதிர்த்துப் போராட முடியாமல் ஒருவர்பின் ஒருவராய் தோல்வியடைவதைப் பார்த்து, அளவற்ற வியப்பையும் உற்சாகத்தையுமடைந்து காட்டாட்களின்மேல் பாய்ந்தார்கள்; எதிரிகளில் இருவரைக் கொன்றார்கள். இவ்விதம் ஒரு பக்கத்தில் மூவரும், மற்றதில் அனேகரும் இருந்து சண்டைசெய்தார்கள். ஆனால் போரானது அதிக நாழிகை நடக்கவில்லை. சில நிமிஷங்களுக்குள் ஸர்வஜித்தின் ஆட்கள் இருவரும் மடிந்துவிட்டார்கள். ஸர்வஜித்தோ மாயாசக்தியால் காக்கப்பட்ட உயிரையுடையவன்போல், அவ்வளவு குதிரையாட்களின் கத்திகளிலிருந்து தப்பித்து, அவர்களுக்கு ஊடே வழிசெய்துகொண்டு வில்லிலிருந்து விடப்பட்ட அம்புபோல் பாய்ந்து காட்டிற்குள் புகுந்து விட்டான்.

"பின் தொடர்ந்து போகவேண்டாம். அவன் அஞ்சா நெஞ்சமுள்ள வீரன். ஆறு ஏழுபேர்கள் ஒரு வீரனைக்கொல்ல பின்சென்றார்களென்று நம்மைப்பற்றி ஒருவரும் சொல்லக்கூடாது" என்று கார்த்தவீரன் ஸர்வஜித்தைத்துரத்திச்செல்ல எத்தனித்தவர்களைப் பார்த்துச் சொல்லவே, அவர்களும் தாக்கீதுப்படி நின்றுவிட்டார்கள்.

இப்படியிருக்க ஸர்வஜித்தின் குதிரை தெறிபட்டதுபோல்பாய்ந்தோடி ஸர்வஜித் அதை என்ன அடக்கியும் அடங்காமல், காற்றாகப்பறந்து பத்து நிமிஷநேரத்தில் ஞாபகஸ்தம்பத்தண்டை வந்துநின்றது. ஸர்வஜித்தும் தான் பின் தொடரப் படவில்லை யென்பதைக் கண்டவுடன், கொஞ்சம் இளைப்பார எண்ணிக் குதிரையை விட்டிறங்கி, முழங்கால் மண்டிபோட்டு தான் சண்டையிலிருந்து ஒரு சிறு காயங்கூட இல்லாமல் தப்பி வந்ததைப்பற்றி தெய்வத்தினிடத்தில் நன்றியுள்ளவனாய், முழு ஹிருதயத்திலிருந்து பொங்கிவரும் வார்த்தைகளால் ஸ்தோத்திரஞ் செய்தான்.

இப்படி கால் மணிநேரம் ஸ்தோத்திரம் செய்துகொண்டிருந்திருக்கலாம். ஸ்தோத்திரங்கள் முடிவுபெறும் வரையில் கண்களை மூடிக்கொண்

டிருந்தான். முடிவுபெற்றுக் கண்களைத் திறக்கையில், சில அடிகளுக்கப்பால் கவசந்தரித்த ஒரு வீரனும், எழினியால் மூடபட்ட முகத்தையுடைய ஒரு ஸ்திரீயும் தன்னை உற்றுநோக்கி நின்றுகொண்டிருக்கிறதைப் பார்த்தான். இவ்வுருவங்களை ஸர்வஜித் முதன் முதல் கண்டபோதிலும், அவைகளைப் பற்றி அவன் எற்கனவே கேள்விப்பட்டிருந்ததால், அவைகளை யறிவதில் அவன் கஷ்டமடையவில்லை. அவ்விருவர்களும் ஸர்வஜித்தைக் குதிரைமேல் ஏறும்படியும், தாங்கள் செல்லுகிற வழியாக பின்தொடரும் படியாகவும் சைகை செய்தார்கள். அவனும் அப்படியே செய்ய, உருவங்கள் அநந்த கிரியை நோக்கிச் சென்றன. பத்து நிமிஷ நேரங்களுக்கெல்லாம், அக்கோட்டையின் புறவாயிலண்டை வந்து நின்றார்கள். வாசற்கதவு பலாத்காரமாய் நெம்பப்பட்டு கீழே தள்ளப்பட்டிருந்தது. ஸர்வஜித் முழுவதையும் பரிசோதிப்பதற்குள் அவ்வுருவங்கள் இரண்டும் அவனைக் குதிரையிலிருந்து இறங்கச்செய்து, முழங்கால் மண்டிபோடும்படி சைகை செய்யவே, அவனும் பயபக்தியுடன் அப்படியே செய்தான். அவ்வீரன் தன் கவசத்தையும் அந்தஸ்திரீ முகத்தை மூடிக்கொண்டிருந்த துணியையும் எடுத்துவிட்டு ஸர்வஜித்துக்குத்தங்கள் முகங்களைக்காட்டி, இருவரும் கைகளை நீட்டி ஸர்வஜித்தின் தலைக்கு நேரே உயரக்கொண்டு வந்து, அந்த இளைஞனுடைய சிரசில் ஆசிர்வாதங்களை வர்ஷிப்பவர்களைப்போல் நின்றார்கள். இப்படிச் செய்துவிட்டு இருவரும் திறந்த வாயிலை சுட்டிக்காட்டிக்கொண்டே மறைந்து விட்டார்கள்.

அவர்கள் மறைவதற்கு முன்னதாகவே கூட ஒன்றையொன்று உரசிக்கொண்ட ஆயுதங்களின் தொனிகளும், அனேகருடைய இரைச்சல்களும், திகிலடைந்த மனிதர்களிடமிருந்து வந்ததுபோல் தோன்றிய கூச்சல்களும் கோட்டைக் குள்ளிருந்து புறப்பட்டன. உடனே மண்டிபோட்ட நிலையிலிருந்து எழுந்து வாளை உருவி உள்ளே பாய்ந்து செல்லவே, மூர்ச்சித்திருந்த ஒரு ஸ்திரீயை தூக்கிக்கொண்டு புறக்கடை வாயின் வழியாய் வெளியே ஓடிவருகிற குண்டகிலனைக்கண்டான்.

நிலவின் சகாயத்தைக்கொண்டு ஸ்திரீயை அறிந்த ஸர்வஜித், "ஐயோ! லீலாவதி" என்று ஆச்சரியத்துடன் கத்தினன்.

26-வது அத்தியாயம்.

உயர்ந்த மெல்லிய ஸர்வஜித்தின் உருவத்தைக் கண்ட மாத்திரத்தில் குண்டகிலனிடமிருந்து உக்கிராவேசக்குறியான இடிமுழக்கம்போலுள்ள சத்தம் உண்டாய்விட்டது. பிரக்ஞையற்ற லீலாவதியை இடதுகையில் தாங்கிக் கொண்டே, வலதுகையில் கட்கத்தைப் பிடித்து தாங்கி, "இன்று இராத்திரி நீ என்னை இருமுறை தோற்கடிக்க விடேன்" என்று சொல்லி பலமாய் அடிக்கவே, ஸர்வஜித் அவ்வடியை கத்தியில் வாங்கிக்கொண்டான். பிறகு குண்டகிலன் மறுபடி அடிப்பதற்குமுன், ஸர்வஜித்தின் ஆயுதம் உயரத்தூக்கப்பட்டு கீழேபாய்கையில், மார்க்கவசத்தைப் பிளந்து அத்தலைவனுடைய வலது தோளை படுகாயஞ் செய்துவிட்டது. அதேகாலத்தில் கார்த்தவீரனும் சடையனும், மற்ற இரண்டுபேர்களும் அதிவேகமாய் ஓடிவந்தார்கள்; நடக்கிற விஷயத்தை ஒரு பார்வையிலறிந்து குண்டகிலனுக்கும் ஸர்வஜித்திற்கும்

நடுவில் வந்து விழுந்தார்கள்; உடனே நமது கதாநாயகனை மஹா உக்கிரமாய்த் தாக்கினார்கள். ஆனால் ஞாபகம் வைத்துக்கொள்ளத்தக்க இன்று இராத்திரியில் ஸர்வஜித் வெல்லக்கூடாத பராக்கிரமத்தை அனுக்கிரகிக்கப் பட்டவன் போல் தோன்றினன். தன்முதுகை சுவற்றில் சாய்த்துக்கொண்டு, கலங்காத முகசீதியோடு மேல்விழுந்து தாக்குகிறவர்களை தீக்ஷணமான வாளால் பெற்றுக்கொண்டான். முதல் வீச்சில் சடையன் ஸர்வஜித்தின் பாதத்தில் மாண்டு விழுந்தான்: அடுத்த நிமிஷம் மற்றொருவன் படுகாயப்படுத்தப் பட்டான்; வேறொருவன் சடையன் கதியை யடைந்தான்; இடதுகையால் சண்டை செய்துகொண்டிருந்த கார்த்தவீரன் வெகு சீக்கிரம் நிராயுதபாணியாகச் செய்யப்பட்டான். பிறகு முகம் வெளுத்து, சொரிகிற இரத்தத்தால் களைத்து பலஹீனமடைந்து, ஒரு பாறைக்கல்லின்மேல் சோர்வடைந்து உட்கார்ந் திருந்த குண்டகீலனண்டை ஓடி அவன் பற்றிப் பிடித்துக்கொண்டிருந்த லீலாவதியைப் பலவந்தமாய் எடுத்துக்கொண்டான். அதே காலத்தில் அவளும் பிரக்ஞையை யடைந்தாள். விழித்துக்கொண்டவுடனே, தன்னறை துஷ்டர்களால் பிரவேசிக்கப்பட்டு தான் பலாத்காரமாய் தூக்கப்பட்ட விவரங்கள் ஞாபகத்திற்கு வரவே, திகிலடைந்து பெருங்கூச்சலிட்டாள்; ஆனால் ஸர்வஜித்தின் கைகளில் தானிருக்கக் கண்டவுடன் அவளடைந்த சொல்லி முடியாத ஆனந்தத்தையும், பரவசங்கொண்டு தேகஞ் சிலிர்த்து கங்கு கரையில்லாமல் அனுபவித்த சந்தோஷத்தையும் யாரால் விவரித்தெழுதமுடியும்?

ஆனால் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள அப்பொழுது அவகாசம் இல்லை; தங்கள் மனதுகளை பார்வைகளால்வெளியிட மாத்திரம்காலமிருந்தது. ஏனெனில் இச்சமயத்தில் உள்ளிருந்து இருகக்ஷியார் சண்டை செய்துகொண்டே வெளியில்வந்தார்கள். இவர்கள் மலையதிபதிகளின் ஆட்களில் மீதியுள்ளவர்களும், அநந்தகிரி கோட்டையின் வேலையாட்களில் சிலருமே. ஆனால் அவர்கள வாசற்படியண்டை வந்தவுடன் கண்ணிற்பட்ட காக்ஷியைக் கண்டபொழுது, இருகக்ஷியாரும் சண்டையை ஏககாலத்தில் நிறுத்திபிரமித்துநின்றார்கள். பாதைக்கப்பால் ஒரு கருங்கற்பாறையில் கொட்டிக் கொண்டிருந்த இரத்தத்தோடு, தோற்றத்திற்கு இறந்துபோனவன் மாதிரி குண்டகீலன் கிடந்தான்; கார்த்தவீரன் தான்கீழேவிழாமல் சுவற்றில்சாய்ந்துகொண்டு பலமற்றிருந்தான்; மலையாட்களில் மூன்றுபேர் தரையில் படுத்தவர்கள் போல் அடிபட்டுக் கிடந்தார்கள். அக்குறுகிய பாதைக்கு மத்தியில், லீலாவதியை இடது கையில் தாங்கிக்கொண்டும், இரத்தம் பூசப்பட்ட வாளை வலதுகையில் பிடித்து, எவன்வந்தாலும் வரட்டும் அஞ்சுகிறதில்லை. இதோ இந்த வாளுக்கு அவனை இரையாக்குகிறேன் என்று சொல்லுகிற ஒரு உக்கிர தேவதைபோல், கன்னங்கள் சிவக்க, கண்களில் பொறிகள் பறக்க, பயங்கரமாய் நின்று கொண்டிருந்தான்.

ஆனால் வந்தசண்டைக்காரர்கள் பிரமித்து நின்றது சில நிமிஷங்கள் தான்; ஏனெனில்,மலையாட்கள் சங்கதிகளின் நிலைமையையும், ஒருபக்கத்தில் குண்டகீலன் இரத்தத்தரையில் புரளுகிறதையும், மற்றொரு பக்கத்தில் கார்த்தவீரன் ஆயுதமற்று பலனில்லாமல் செய்யப்பட்டிருப்பதையும் பார்த்தவுடன், கடுமையாய் பழிவாங்க எண்ணி பயங்கரமான கூச்சல் செய்துகொண்டு மூர்க்கத்தனத்தை யடைந்த புலிகள்போல் ஸர்வஜித்தின்மேல் பாய்ந்தார்கள். ஸர்வஜித்திற்கும் தனக்கும் அவ்வளவு சமீபத்தில் பயங்காரமாய்

பளீச்சு பளீச்சென்று பிரகாசஞ் செய்துகொண்டுவந்த அவ்வளவு கத்திகளையும் பார்த்தக்ஷணத்தில் லீலாவதியின் கண்டத்திலிருந்து பொறுக்கமுடியாத பயத்தையும், உருக்கமுள்ள மனதைக் கிழித்துச் செல்லுகிறதுபோலும், தாங்கமுடியாத மனோவேதனையைக் காட்டுகிறதுமான, ஒரு பெருங்கூச்சல் வெடித்துக்கொண்டு வந்தது; ஆனால் ஸர்வஜித் உடனே அவளைத் தனக்குப் பின்னால் நிற்கும்படிசெய்து, அவளைப் பிடித்துக்கொண்டிருந்த கையை விடுவித்துக்கொண்டு, வந்தவர்களிடமிருந்து கார்த்துக்கொள்ள ஆயுதத்தை உயரத் தூக்கினான். இதெல்லாம் இமைப்பொழுதில் நடந்தேறியது; ஒரு நிமிஷத்திற்குள் ஆறேழு கத்திகள் தன்னுடைய சத்தியில் வந்து உரசின. இத்தடவை முன்போல் அதிர்ஷடம் அவன் சகாயத்திற்குவரவில்லை. ஏனெனில் அவன் கத்தி பிடியண்டை ஒடிந்து விழுந்துவிட்டது; அடுத்த நிமிஷம் பலமாய் அடிக்கப்பட்டு லீலாவதியின் பாதத்தில் வீழ்க்கப்பட்டான் அவனை இருள் சூழ்ந்தது; மந்திரவாதியின் கோலாட்டுதலால்போல திடீரென்று அக்காக்ஷியெல்லாம் மறைந்து மூர்ச்சையென்னும் ஜலத்தில் முழுவதும் அழுத்தப்பட்டான்.

அவனுக்கு மறுபடியும் ஞாபகம்வந்தபோது ஒரு படுக்கையில் படுத்திருந்தான்; சூரிய வெளிச்சம் ஜன்னல் வழியாய் பிரகாசித்துக்கொண்டிருந்தது. தான் படுத்திருந்த அறை அவனுக்குத் தெரிந்த அறைமாதிரி இருந்தது; இருந்தாலும் மூளை குழப்பத்திலிருந்ததாலும், எண்ணங்கள் தெளிவில்லாமலிருந்ததாலும், அவனுக்கு ஒன்றும் துலக்கமாயில்லை. மனதை ஒழுங்கு படுத்தக்கருதி மறுபடி கண்களைமூடி சிறிது நேரம் யோசிக்கையில நடந்தேரிய சம்பவங்களெல்லாம் ஞாபகம்வரவே, மறுபடியும் கண்களைத் திறந்தான்; இப்பொழுது அநந்தகிரியில் தனது சொந்த அறையில்தான் இருக்கிறதைக் கண்டான். அதே க்ஷணத்தில் திரைத்துணி சலசலவென்று ஓசைப்பட்டது; கண்களைத் தூக்கிப்பார்க்கையில், சேஷியம்மாள் பக்கத்தில நிற்கிறதைப்பார்த்தான். அந்த ஸ்திரீயின் அன்பான முகத்தைப் பார்த்தவுடன் அவனது வெளுத்த முகத்தில் ஏற்பட்ட சந்தோஷக்குறியையறிந்த அவள், ஸர்வஜித் தன்னையறிந்துகொண்டானெனக் கண்டு திசை அடங்காக் களிப்புடன், "முகுந்தரே, பெரியவரே, அவன் விழித்துக்கொண்டு விட்டான்; அவன் சரியான புத்தியிலும் இருக்கிறா"னென, முகுந்தன், "ஸ்திரீயே, இரைந்து பேசாதே" எனச் சொல்லிவிட்டு, தானுமெழுந்து, படுக்கையண்டை வந்தான்; பிறகு ஸர்வஜித்தை அன்புடன் பார்த்துவிட்டு, "ஈசன் களிகூர்ந்திருக்கிறார். இவ்வெளிய சிறுவனுக்கு இனி உயிருக்கு அபாயமில்லை. அவனை ஜன்னிவிட்டு நீங்கிவிட்டது" என்றான். "ஆ, நல்லவரே, வீணை வாசிப்பதில் தாங்கள் எவ்வளவு சமர்த்தரோ அவ்வளவு வைத்தியத்திலும் சமர்த்தராயிருக்கிறீர். சமயத்தில் தாங்கள் கோட்டையிலிருந்தது இப்பையனுடைய அதிர்ஷ்டவசந்தான்" என்றாள் சேஷி. "லீலாவதி பத்திரமாய் இருக்கிறாளா?" என்று ஹீனமான குரலோடு ஸர்வஜித் கேட்டான்; அப்பொழுது அவன் முகக்குறியானது அவனது கேள்விககு பதிலை எவ்வளவு ஆவலோடும் விசாரத்தோடும் எதிர்பார்த்தானென்பதைக் காட்டிற்று.

"ஆம், எனதருமைச் சிறுவனே! லீலாவதி பத்திரமாய் இருக்கிறாள். அப்படியிருப்பதற்கு நீ தான் காரணம். அவளை விபத்திலிருந்து மீட்டி வந்தது உனது கை. அதை அவள் அறிவாள். அதை எல்லாருக்கும் பஹிரங்கமாய் வெளியிட்டாள். ஆம் நன்றியுடைய முழு ஹிருதயத்துடன், குதூகலத்

தால் ஆவேசங்கொண்ட தொனியோடும் பஹிரங்கஞ் செய்தாள். குண்டலனுடைய பிடிப்பிலிருந்து அவளைப் பிடுங்கினது உன் கையே! தோற்றுப்போன தங்கள் எஜமானர்களுக்காக பழிவாங்க எண்ணி உன்மேல் பாய்ந்த மலையாட்களிடமிருந்து அவளைக் காப்பாற்றினது உன்கையே. உன்னை அவர்கள் அடித்துத் தள்ளினபோதிலும், கோட்டைக் காவலர்கள் உன்னுடைய தைர்யத்தைக் கண்டு வியந்து, மலையாட்களைப் புறங்காட்டி ஓடும்படி செய்துவிட்டார்கள். ஆனால் போகும்போது தலைவர்களைத் தூக்கிச்செல்லும்படி விடப்பட்டார்கள்" என்றாள் சேஷி. முகுந்தன் சேஷியைப்பார்த்து, "அம்மா, நீங்கள் சொல்லுகிறதை அந்தப் பையன் எவ்வளவு ஆவலாகக் கேட்கிறான். அவனுடைய தற்கால தேகஸ்திதியை உத்தேசிக்கும்போது, அவனது உணர்ச்சிகளைக் கிளரிவிடுவது தீங்கை விளைவிக்குமென்று நினைக்கிறேன்" என்றான். அதற்கவள், "முகுந்தரே, அப்படியல்ல, தாங்கள் சாமர்த்தியமுள்ள வைத்தியர்தான். ஆயினும், இப்பையன் ஆவலாய்க்கேட்க விரும்புவதை நாம் சொல்லாமலிருப்பது தீங்கை விளைவிக்குமென்றும், சொல்லிவிடுவது மனதின் அயாஸத்தை நீக்குவதுடன்கூட, அவனுக்கு தேகத்திற்கு அனுகூலத்தை அதிசீக்கிரம் உண்டு பண்ணும் என்றும் நினைக்கிறேன்" என்றாள். அதுவும் நியாயந்தான் என்று முகுந்தன் சொல்ல, ஸர்வஜித். "நடந்த சமாசாரங்களெல்லாம் பிரபு புஷ்யமித்திரருக்குத் தெரியுமா? என்று கேட்டான். உடனே முகுந்தன், "தெரியாமல் எப்படி யிருக்க முடியும்? சீமாட்டி லீலாவதி உன்னுடைய அகாத சௌரியத்தை உள்ளது உள்ளபடியே சொல்லமறக்கவில்லை" என்றான். இந்த வார்த்தைகளைக் கேட்ட ஸர்வஜித் ஆனந்த பரவசனானான்; ஏனெனில், அவ்வழகிய பெருமாட்டி, தான் விடுபட்ட வந்த விவரங்களை தகப்பனுக்கு வர்ணிப்பதில் குதூகலம் அடைவாளென்றே எண்ணினான்.

"இத்தௌர்ஜன்ய காரியம் எப்படி நடந்தது?" என்றான் ஸர்வஜித். முகுந்தன் சொல்லுகிறான்; "நான் கேள்விப்பட்ட மட்டில், மலையாட்கள் கோட்டைக்குள் திருட்டுத்தனமாயும், தந்திரமாயும் பிரவேசித்து, கோட்டைவாசலிலிருந்த பாராக்காரர்கள்மேல் பாய்ந்து, அவர்களை ஜடுதியில் நிராயுதபாணிகளாக்கி, கைகால்களைக்கட்டி, கண்மூடி கண்திறப்பதற்குள் வாயில் துணியை அடைத்துவிட்டார்கள். இதையெல்லாம் மஹா சாமார்த்தியமாய்ச் செய்தார்கள். பாராக்காரரில் ஒருவன் உடனே கொல்லப்படுவதாக பயமுறுத்தப்பட, வழிகாட்டுவதாக ஒப்புக்கொண்டான். இப்படி வழிகாட்டப்பட்டு மலையதிபதிகள் லீலாவதியண்டை சென்றார்கள். பிறகு நடந்ததை சேஷியம்மாள் நன்றாய்ச் சொல்லக்கூடும்" என, சேஷி, நான் ஆயிர வருஷங்கள் உயிருடனிருந்தாலும் நேற்று இராத்திரி சமாசாரங்கள் மறக்குமா? சீமாட்டியின் அறையோடு சம்மந்தப்பட்ட ஒருசிறு அறையில் படுத்துறங்குகையில், பாதி இராத்திரியில் அவ்வறையில் கடோரக் குரல்களையும், பலத்து சப்தித்த காலடிகளையுங் கேட்டுதிடுக்கிட்டேன். என்னுடைய படுக்கையிலிருந்து தாவியெழுந்து, விளக்கெறிந்துகொண்டிருந்த எனது எஜமானியினறைக்கோடினேன்: அவள் கட்டிலண்டை காட்டரசர்கள் இருவரும் நின்றுக்கொண்டிருந்தார்கள். அவளைத் தங்களோடு வரும்படி கேட்டார்கள். நான் வந்ததும் அவர்களை அங்கு விட்டோடிவிடும்படி சொன்னேன். உடனே அவர்களிலொருவன் நான் மூர்ச்சித்து விழும்படி மண்டையிலடித்தான். பிறகு நடந்ததொன்றும் எனக்குத் தெரியாது என்றாள்.

☞ ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி., ஏ.

வைத்தியவிஷயம்.

வெள்ளாட்டின் பாலின் பிரயோசனம்.

செம்மறி ஆடு, வெள்ளாடு என இருவகையாடுகளில் வெள்ளாடு செம்மறி யாட்டைக் காட்டிலும் உயரமாயும், புஷ்டியாயும், மூர்க்க குணமுள்ளதாயுமிருக்கும். இதன்பால் மிக உருசி உடையது. நம்தேகத்திற்குப் புஷ்டிதரக்கூடியது. பசுவின்பாலுக்கும் எருமைப்பாலுக்கும் எவ்வளவுவித்தியாசம் உண்டோ அவ்வளவு வித்தியாசம் வெள்ளாட்டின் பாலுக்கும் செம்மறியாட்டின் பாலுக்கும் உண்டு.

(2) நம் சுதேசிய வைத்தியத்திற்கு வெள்ளாட்டின் பால் மெத்தவும் கையாளப்படுகிறது.

(3) காலை 7 மணிக்குள் இவ்வாட்டின் பாலைக் கறந்து அதைச் சுத்தமான வெள்ளை வஸ்திரத்தில் வடிகட்டி முப்பது வயதிற்கு மேல்பட்டவர்கள் கால் படிபாலும் அதற்குக் கீழ்பட்டவர்கள் அரைக்கால் படி பாலும் கொஞ்சம் பத்தியத்துடன் ஏழுநாள் சாப்பிட்டுவந்தால் மேலே தேக சம்பந்தமான வியாதி யாதொன்றும் அணுகாது. ஆறு மாதத்திற்கு ஒருதரம் நாம் இதைச் சாப்பிட்டால் தேகத்திற்கு மிகவும் நல்லது.

(4) பல வீனர்களும் வியாதி உள்ளவர்களும் குணமடைய வேண்டுமென்ற எண்ணமிருந்தால் அடியில் வருவனவற்றைக் கவனிப்பாராக.

(1) தேகத்தில் உள்ள சொரிகளுக்கும் துர்நீருக்கும், சொரிந்தால் தடிப்பதற்கும், இந்த ஆட்டின்பாலை ஒருவாரம் காலையில் மேலே சொல்லியபடி சாப்பிடவும்.

(2) நீர் கடுப்பு: மூத்ர துவாரத்தில் உண்டாகும் எரிச்சல், நீரிழிவு முதலான வியாதிகளுக்கு இதைப்பன்னிரண்டு நாள் சாப்பிடவும்.

(3) உடம்பில் நீர் ஏற்றலுக்கு மண்டூரத்தை வெள்ளாட்டின் பாலில் தேய்த்துக் கொடுக்கவும்.

(4) காலாகாலையில் மலச்சிக்கலை இது ஏழுநாளில் கண்டிக்கும்.

இதற்குப் பத்தியமாவன:—புளி சேர்க்கக்கூடாது, நல்லெண்ணெய், உளுந்து தவிர்க்கவும். காபிக்குப் பதிலாக சோடா சாப்பிடலாம். தலையைச் சீவிக்கொள்ளுபவர்கள் தைலம்தடவிச் சீவிக்கொள்ளலாம். பசுமோர் சேர்த்துக் கொள்ளலாம். பழையமுது கூடாது. ஒத்துக்கொண்டால் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம். எண்ணெய்க்குப் பதில் பால் மிளகு தேய்த்துக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு:—வியாதியஸ்தர்கள் இதைமீறி நடக்கக் கூடாது. அவ்விதம் செய்தால் கெடுதிகள் உண்டாகும். குளிர்ச்சி தேசத்தில் உள்ளவர்கள் எவ்விதமேனும் செய்யலாம். மாதம் ஒரு தடவை யாவரும் பத்தியமில்லாமல் சாப்பிடலாம். காங்கை சரீரமுள்ளவர்களும் உஷ்ணதேசத்தில் உள்ளவர்களும் மனம்போனபடி யெல்லாம் சாப்பிடுவதாயிருந்தால் வயிற்றில் கட்டிகள் உண்டாயினும் உண்டாகும். ஆதலால் மேலே சொல்லியபடி சாப்பிடவும்.

சுதேசமித்திரன்.

வெற்றிலை.

வெற்றிலை இந்தியாவில் எல்லா இடங்களிலும் உண்டாகக்கூடியது. இது பயிர் வெற்றிலை முதுகால் வெற்றிலை என இருவகைப்படும். முதுகால் வெற்றிலைதான் மிகவும் சிலாக்கியமானது. இதுதான் நாவிற்குச் சுவையைத்தரும். இது சிறியதாயும் மெல்லியதாயு மிருக்கும். பயிர் வெற்றிலைக்கு யாதொரு குணமும் இல்லை. வெற்றிலை என்னும் பெயர் முதுகால்வெற்றிலைக்கேதகும்.

2. வெற்றிலை யுட்கொள்ளும் விதம். இதைப் பற்றிச் சிறுவர்கள் கூட அறிவார்கள். ஆயினும் ஒவ்வொன்றிலும் சிலமுக்கியமான விஷயங்கள் உண்டு. வெற்றிலையை நீர்போகத் துடைத்துப் போட்டுக்கொள்ளவேண்டும். வெற்றிலையுடன் சேரும் பாக்கைத் தட்டிப் போட்டுக் கொள்ளவேண்டும். ஏனென்றால் இதில் சில புழுக்கள் இருப்பினும் இருக்கலாம். இது தேகத்திற்குள் சேர்ந்தால் நம் உயிருக்கே உலைவைத்துவிடும். ஆதலால் கொஞ்சம்ஞாபகமிருக்க வேண்டும். மேலும் பாக்கானது நாட்டுப் பாக்கா யிருக்கவேண்டும். இது உருண்டையாயும் நீளமாயும் உள் குழைந்ததாயும் வாயில்போட்டால் அதிக துவர்ப்பாயு மிருக்கும். மற்றப்பாக்குகளை உபயோகிப்பதில் பிரயோசனமில்லை. சுண்ணும்பு மிகவும் சுத்தமாயும் வெண்மையாயும் தொட்டால் மிருதுவாயு மிருக்கவேண்டும். கற்கள் சேர்ந்திருக்கக்கூடாது. சிறு கற்கள் தேகத்தில் சேர்ந்தால் உள்ளே புண்கள் உண்டானாலும் உண்டாகும் இதில் இவைகள்தான் முக்கியமான விஷயங்கள்.

3. இனி வெற்றிலையின் குணத்தைப் பார்ப்போம். வெற்றிலைக்குக் கீழ்க்கண்ட வியாதிகளை ஒழிப்பதில் அதிக சக்தி உண்டு:—

1. ஜீரண சக்தியை விருத்தி செய்வதில் இதற்கு நிகர் வேறொன்று மில்லை.

2. வயிற்றுக்கடுப்பு, மலபந்தம், மலத்துடன் இரத்தச்சீழ் வடிதல், இவைகளுக்கு ஏழு வெற்றிலையுடன் ஒரு நாட்டுப் பாக்கு சேர்த்து ஒரு நாளைக்கு ஐந்துதரம் தரித்துக் கொண்டால் இரண்டே நாளில் கண்டிக்கும்.

3. பார்வைக்குறைவு, ஞாபகக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, உள்ளவர்கள் வெற்றிலையைத் தினம் உபயோகிக்கவேண்டும்.

4. தேள் கொட்டினதற்கும் கடித்ததற்கும் வசம்புத்தூளை வெற்றிலைச் சாற்றுடன் சேர்த்து அரைத்து முப்பது நிமிஷத்திற்கு ஒருதரம் பூசினால் வலியிராது.

5. தெரியாமல் மண்ணெண் ணெயைக் குடித்தவர்கள், வெற்றிலையை மகாணிப்படி சாறுகப்பிழிந்து பசுமோருடன் கலந்து சாப்பிட்டால் மிகவும் நல்லது. பத்து நிமிஷத்தில் குணமாகும்.

6. நீடித்த ஆயுளை விரும்புகிறவர்கள் வெற்றிலையை ஒரு நாளும் கைவிடார்கள்.

குறிப்பு:—எப்பொழுதும் இரசத்தை உள்விழுங்கிச் சக்கையை உமிழ்ந்து விடவேண்டும்.

☞ டாக்டர், S. M. சர்மா, A. V. M. S.

சு-மி.

பன்னிரு இரவு.

(32-வது பக்கத்தொடர்ச்சி)

காவலனது கடிமனை புகுந்துதான் ஒலீவியாவினிடம் போய்வந்த காரியத்தின் முடிவைச் சவிஸ்தாரமாக வுரைத்து இனி அம்மாதை நினைத்துருகுவதில் பயன் சிறிது மில்லையென்று பன்முறை புகன்றும் அவன் கேளாது பிடிவாதஞ் செய்து நோவுண்ட குழவியைப்போல் தனக்கும் பிறர்க்கும் துயர் விளைப்பதைக் கண்டு மனவருத்த முற்றாள். வாடிய முகத்துடன் அவள் வருந்துவதைக் காண தன்னைப்போலவே அவளும் பயனற்ற காதலின் கூரிய முனையால் தாக்குண்டிருத்தல் வேண்டுமென் றெண்ணி "அழகுள்ள மாது ஒருவள் உன்மனத்தைக் கவர்ந்தனள்போல் தோற்றுகின்றதே அது மெய்தானே?" என்றான்.

"தலைவ, ஆம்; நின் கருணையால் மெய்தான்" "அந்த பாக்கியசாலி எப்படிப்பட்டவளென்று நான் அறியலாமோ?"

"வயதிலும், உருவத்திலும், உம்மை யொத்தவள்." தன்னிலும் பல்லாண்டு சிறியனான வாலிவனது காதலி தன்வயதின ளென்பதைக் கேட்டு நகைத்து "அவ்வளவு வயதுமுதிர்ந்தவளையோ நீ மணம்புரிவது? அது தகாது? ஏனெனில் ரோஜாப் புஷ்பங்கள் தமதழகு முற்றுந் தோன்றுமாறு மலர்ந்த நிமிஷமே வாட ஆரம்பித்து விடுவதுபோல, ஸ்திரீகளும் இளமைப் பருவத்திலேயே அழகு முதிர்ந்து உடனே வாடிவிடுவர். அதன் பின் கணவரைத் தமதன்பினால் கட்ட வலியற்றவ ராகின்றனர். ஆண்மக்களது காதல் ஆழமறியாதது. ஆதலால் அழகுள்ளவரைதான் மனைவியிடம் பிரியங் கொண்டாடுவர். இது உலகத்து இயற்கை" என்றான்.

"ஆம், நீர் சொல்வது சரியே."

"ஆயின் உன்மனைவி உன்னைவிட பாலியமா யிருப்பதே நலம்."

வயோலா பெண்ணென்று சந்தேகிக்கச் சிறிதுமிடமில்லை யாகையால், அவள் குறித்தது தானேயன்றி யேனைமடந்தை யொருவரு மில்லையென்று அரசனுக்குச் சற்றும் புலப்படவேயில்லை. இவ்விதமாக இருவரும் சற்று நேரம் சம்பாஷித்து பின் தன் சோகத்தை சாந்திபண்ணுமாறு இனிய பாடல்களை பாடக்கேட்டு, அப்பாட்டினால் தாபம் தணியாமல் அதிகரிப்பதைக் கண்டு இனி ஆற்றுதவனாய் வயோலாவை நோக்கி, "நண்பா, நீ சொல்லிய வண்ணம் அவளை மறந்திருப்பது என்னால் கூடவில்லை. ஆதலால், விலை மதிக்கத் தகாத மாணிக்கத்தை தன் தலையில் கொண்டு அதனை பயனைத் தானே கொள்ள வியலாத காலை அதை யடையலாமென் றெண்ணி சமீபத்தில் அணுகும் பிறரைத் தன்னிடத்தே யுள்ள கொடிய விஷத்தால் தீண்டிக் கொல்லும் நாகத்தையொத்து ஈரமில்லா நெஞ்சத்தாளாய் எனக்கு காலனாய்த் தோன்றியுள்ள ஒலீவியாவினிடம் மற்றொரு முறை சென்று நான்படுந்துய ரனைத்தும் அவளறியப் புகன்று வருவாய். 'அவளது ஏராளமான

செல்வத்தை விரும்பி நான் அவளைத் தொடர்கிறேனல்லன். சம்பத்தும், ஐசுவரியமும் நிலையற்றதென்பதை நன்கறிந்துள்ளேன். எனது ஆழ்ந்த காதல் கேவலம் இல பலங்களை மதிக்கத் தக்கதன்று. அவளது பேரழகும், சிலகுணமுமே எனது விருப்பத்தை நெய்யையிட்டு நெருப்பை வளர்ப்பது போல் வளர்க்கின்றது' எனச்சொல்'' என்று சொன்னான்.

"அய்யோ! திரும்பத் திரும்ப நீர் சொல்வதைச் சொல்கின்றீரே யல்லாது சமாசாரத்தைக் கேட்டுப் பேசுவதென்பதில்லையே. உம்மை நேசிப்பது தனக்கு சாத்தியமில்லாத காரியமென்றால் அவளுடன் செய்யக் கூடியதென்ன உளது. நீர் ஒலிவியாவை நேசிப்பதுபோலவே, மற்றொருவள் உம்மிடத்தில் காதல்கொண் டிருக்கின்றனளென் றெண்ணிக்கொள்ளும். உமக்கு, பாவம், அவள்மேல் பிரியமில்லை. அப்படியே சொல்லிவிடுகின்றீர். அப்பொழுது அவள் தன் விதியைநொந்து பேசாமல் போய்விட வேண்டியதல்லாமல், வீண்வம்பிடுவாளானால் நீர் உமது கருத்தைமாற்றி அவளது பிடிவாதத்திற்காக அவளை மணம்புரிந்து விடுவீரா?''

"என தன்பிற்கு நிகரான அன்பை யறிந்துள்ள மாதருமிப் புவியிலுண்டோ?

"உடம்போ டுயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு!''

பெண்களது காதல் நீடித்துத் தங்குவதன்று. மழை பெய்யுமளவுமே பிரகாசித்து மறையும் அழகிய வானவில்லை யொத்து, கணவன் வாலிவனாயும் தனவந்தனாயு மிருக்கும்வரை தோன்றி யொளிக்கும் இயல்புடைத்து. ஆதலால் ஒரு ஸ்திரீயை என்னுடன் ஒப்பிடாதே.''

"ஆனாலும் நான் அறிவேன்—''

"என்ன அறிவாய் நீ.''

"ஒரு ஸ்திரீ ஒரு புருஷனை யெவ்வாறு நேசிக்கக் கூடுமென்பதைத் தான். ஆண் மக்களைப் போலவே பெண் மக்களும் ஆழ்ந்த காதலை யுடையவர்களென்பது சத்தியம். என் தந்தைக்கோர் புத்திரியிருந்தாள். நான்பெண்ணாயிருந்திடில் உங்களை எவ்வளவு மனப்பூர்வமாய் நேசிப்பேனோ அவ்வளவு உறுதியான காதலுடன் ஓர் ஆண்மகன் மேல் அவள் காதல் கொண்டாள்.''

"அவள்கெதி பின் எவ்வாறாயிற்று?''

"பதியற்ற கெதியாயிற்றய்ய. தன் வருத்தத்தை வாய்விட்டு மொழிந்தாளில்லை. புழுவரித்த புஷ்பம் நிறம் மங்கி வெளுப்பதுபோல், வியாகூலத்திற் கிரையாகித் தன் செந்தாமரைமுகம் மங்கலடைந்தது!''

உன் சகோதரி தன் காதலின் கொடுமையால் உயிர் துறந்தனளோ?

"எனக்கு சகோதரன், சகோதரி எல்லாம் நான்தான். அதிருக்கட்டும். நான் ஒலீவியாவிடம் சென்று வருகின்றேன்!''

ஆம், ஆம்; அதைச்செய். முதலில் நீதான் அதற்கேற்றவன். வேறொரு வராலும் அஃதியலாது. "அன்பறிவா ராய்ந்தசொல் வன்மை தூதுரைப்பார்க்கின்றி யமையாத மூன்று" என்று கூறப்பட்டுள்ள மூன்று நற்குணங்களும் உன்னிடம் பொருந்தியுள்ள. நான் உன்வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பேன். சென்றுவா. இத்தடவையாவது நல்லசமாச்சாரமகொண்டுவா?"

தனது சுய நன்மையைச் சிறிதும் பாராட்டாது தனக்கு உண்டியிடும் அரசனது நலத்தையே கருத்திற்கொண்ட இப்பெண்மணி அவனது ஏவலை நிறைவேற்றும் வண்ணம் ஒலீவியாவின் மாளிகைக்குச் சென்றாள். இம்முறை அவள் சுலபமாய் உட்புகுந்தாள். தங்கள் யெஜமானி யெக்தெந்த ஆடவருடன் பேசுவதில் பிரியங்கொண் டுள்ளாளென் றறிவதில் சாதாரணமாய் சேவகர்கள் வெகுசமர்த்தர். ஆகையால் வயோலாவின் வரவு ஒலீவியாவுக்குப் பிரியமில்லாத தன்றென வுணர்தல் அவர்களா லியலாததன்று. இதுவரை அரசனது தூதுவரை தனதில் புகவொட்டாது தன்னை ஒளித்துக்கொண் டுறைந்தவள், வயோலாவினிடம் மாத்திரம் திடீரென தனதுமனதை மாற்றியது யாது காரணம்பற்றி யென்று அவர்கள் ஒருக்கால் ஊகித்திருந்தாலு மிருக்கலாம். ஆகையால் இப்பொழுது ஒருவரும் அவளை முன்போல உள்ளே போகவிடாமல் தடுக்கவில்லை. ஒலீவியா வோ இராமுழுதும் தூதனுடைய நினைப்பாகவேயிருந்து ஆவலுடன் அவன்வரவை யெதிர்பார்த்துத்தன் மாளிகையைச் சுற்றியுள்ள சிங்கார வனத்தில் உலாவிக்கொண் டிருந்தாள். அவனைக் கண்டதும் சந்திரனைக்கண்ட கடல்போல் ஆனந்தமடைந்து விரைவிற்சென்று அவனைக் கைப்பற்றி யோகக்ஷேமங்களை விசாரித்தபின் பதரிய மனத்துடன் "உன் பெயர் என்ன என்று கேட்டாள்?"

"அம்மா, உனது எளிய சேவகனது பெயர் சிசாரியோ (வயோலா ஆண்வேடம் பூண்டபோது அதற் கேற்பக்கொண்ட பெயர்)"

"இம்மாதிரியான கூழைக் கும்பிடுபோட வாரம்பித்தது முதல்தான் மாநிலத்தில் சந்தோஷமென்ப தில்லாமற்போயிற்று. நீ அரசனுக் கன்றோ சேவகன்?"

தாயே, நான் அரசனது பணிவிடைக் காரன்தான். அரசனோ உனதடிமை. ஆகையால் நான் உனது உரிமையான சேவகனன்றோ?"

"இனி எந் நிமித்தத்தாலும் அரசனைப் பற்றி என்னிடம் பேசவே கூடாதென்றிட்ட கட்டளையை மறந்திட்டனையோ? அவரது பெயரைக் கேட்பதற்கே எனக்கு அறுவெறுப்பா யிருக்கின்றது. ஆனால் அவர்பாங் கல்லாது தானாகவே நீ யென்னை வரிப்பாயானல் கோபாலனது ஆழினிசையைக் காட்டிலும் உன் மொழிகளை மிகுந்த அன்புடன் கேட்பேனே. ஸிஸேரியோ, முன்தடவை நீ இங்குவந்துவிட்டுப் போனபோது நானாகவே என் சேவகனை ஒரு மோதிரத்துடன் உன்னிட மனுப்பினேனே; அப்பொழுது நீ எவ்வளவு இழிவாய் என்னை எண்ணி யிருந்திருப்பாய். அத்தகாத காரியத்தைச் செய்ததினால் என் மானத்தையும் கவுரவத்தையும் இழந்தது மல்லாமல் உன்னையும் அந்த ஸாகஸச் செய்கையால் அகவுரவப் படுத்தினதாக நினைத்திருப்பா யல்லவா? இனி நான் சொல்லக்கூடிய தொன் றுமில்லை. ஆகையால் உன் எண்ணமென்ன?"

"நீ சொல்வதைக் கேட்க மிகவும் பரிதாபமாகவிருக்கிறது?"

"காதலுக்கு முந்திய ஒரு படிதான் பரிவு?"

"இல்லவேயில்லை. நாம் வெகுவாய் நம் சத்துருக்களுக்காகப் பரிதாபப் படுவதில்லையோ?"

"இனி உன்னுடன் வாதாடிப் பயனில்லை. கேவலம் ஒரு ஏவற்காரனிடம் என் நிலைமையை மறந்து, கவுரவத்தையிழந்து, மானத்தையும் பறிகொடுத்தேன். செவிடனறிவனோ சங்கீத வினிமையை: மலடியறிவளோ மக்களருமையை? எனதன்பின் குணத்தை யறிவையோ தாழ்குடிப் பிறந்தவோர் சேவகன்? வலியவந்த இலக்ஷ்மியைக் காலாலுதைக்கும் அடி மூடனுக்கு உயர்குல மாதினது காதலின் சிறப்புத் தெரியுமோ? ஐயோ!—வீஸேரியோ! உன்மன மிரங்கவில்லையா? யான்படுந்துயர் புகலவெளிதோ? உனதன்பிற்கு நான் தகுந்தவளல்லவோ?"

"எனதுமனம் இதுவரை ஒரு ஸ்திரீயாலும் கவரப்பட்டதன்று. இனி மேலும் இப்பிறப்பினில் கவரப்படாது. இது சத்தியம் நேரமாச்சுது; நான் போய் வருகின்றேன். எனது அரசனுக்காக இனி நான் இங்கு வரவேண்டுவதில்லையே?"

"ஆயினும் மற்றொருமுறைவா. ஒருவேளை என் மனத்தை அவர் பக்கல் நீ திருப்பினாலுந் திருப்பலா மல்லவா?"

இவ்விதமாக ஒலீவியா ஒளிமறைவு சிறிதுமின்றி தனதன்பின் தாபத்தை வெளியிட்டதும் வயோலாவினது எளிய நெஞ்சம் விளக்கில் விழுந்த வெட்டிற் பறவையைப்போல தத்தளித்தது. காமத்தின் கொடுமையைத் தானே அநுபவித்தவளாகையால் ஒலீவியாவின் கஷ்டங்கள் எத்தன்மைத் தானவையென்று நன்கு அறிந்தாள். அன்பென்பதையே கண்டறியாத கல் நெஞ்சக் கயவரேனும் அந்தப் பொற்பாவை வேதனை தாங்காது ஒலமிடுவதைக்கண்டு மனமுருகுவரெனின் அன்பே யுருக்கொண்டுள்ள வயோலா எவ்வளவு துன்பமடைந் திருப்பளென்று நாம்சொல்ல வேண்டுவதில்லை. பிறவுயிர்க்கு நேரிடும் சிறு துன்பங்களையும் தனக்கு நேர்ந்தனவேபோல் பாவித்துத் துயருறும் இந்தப்பதுமை நோய்களுள் அகோரமானதும் இன்பத்தாலன்றி வேறுவகையால் சாந்திபண்ணக்கூடாததுமான காமநோயால்தன்னைப் போன்ற ஸ்திரீ ஒருவள் வருந்துவதைக் கண்டு தானும் சகிக்கமாட்டாமல் வருந்தினளென்று சொல்லவும்வேண்டுமோ? பாவம்! இவ்விருள் நீர்ஞாலத்து இவள்போல் துன்பப்பட்டவர்களுண்டோ? கடற்கரையில் கூச்சலிடும் இரக்கமற்ற அலைகளுக்குத் தன் அருமைச் சகோதரனைப் பறிகொடுத்து, விதிவசத்தால் தனதிஷ்டத்திற்கு விரோதமாக மாறுவேடம்பூண்டு, அதன் பயனாக அரசனிடத்தில் தான்கொண்ட காதலை வெளியிற்சொல்லக் கூடாமலானதுமன்றி, ஓர் அழகியஸ்திரீயைத்தன்பொய்யுருவால்மயக்கி தன்னிடத்து அன்பு மூட்டிமற்றும் பல துன்பங்களுக் குள்ளாயினள். இவ்வளவு கஷ்டங்களையும் பாராட்டாமல் அவைகளைவெளிகாட்டாது அரசனது துக்கத்தை சதா சர்வகாலம் மாற்றிக்கொண்டிருக்கும்படி நேரிடின் அவள் யாதுசெய்வள்? கவசம்

பூண்டு, கத்தியேந்தி போர்களத்தின் மத்தியில் பகைவரைத் தம் வாளுக்கிறையாக்கும் போர்வீரரேனும் அவரது இரும்பாலாய இதயமும் இவ்வளவு கஷ்டங்களைத் தாங்கா துடைந்தே யிருக்கும். பழவினைப்பயனால் இத்தகைய துயரனைத்தும் பொறுமையுடன் தாங்கிட நேரிட்ட இவள் சரித்திரத்தைக் கேட்கும்போதே நாம் நீர்ததும்பிய கண்களுடன் கைகூப்பிக் கடவுளை வணங்கி "ஐயோ! மதியற்ற தெய்வமே, இவள் இவ்வாறு துன்பப்படுவது தகுதியோ? போதும். இனி அவள் துயரை நீக்கியருள்வாய்?"

எனப் பிரார்த்திக்கத் தோற்றுகின்றதே. அப்படியானால் அவள்தானே எவ்வளவு கஷ்டங்களுக் குள்ளாயிருப்ப ளென்பதை வரைவதைக் காட்டிலும் நினைத்துப் பார்ப்பதே எளிதாகும். ஷேக்ஸ்பியர் சிருஷ்டி செய்துள்ள பெண்மணிகள் ஒவ்வொருவரும் சிற்சில குணபூஷணங்களை யணிந்து சீர் பெற்றுள்ளார். அவர்களுள் வயோலாபூண்டு விளங்கும் இரத்னங்கள் மூன்று நாண், மடை, அச்சம். இவற்றுடன் துன்பம் வந்துற்றகாலை வீண் துயருராமல் கடவுளிட்ட கஷ்டத்தை நம் கெதியிதென் றெண்ணித் தைரியமாய்ப் பொறுக்கும் வீரகுணம் மிக மெச்சத் தக்கதன்றோ?

இவ்விடத்தில் இவர்களைச் சற்றுவிட்டுப் பிரிந்து வயோலாவின் சகோதரனை ஸெபாஸ்டியனுடைய சமாசாரம் என்ன வாயிற்றென்று பார்ப்போம். முன்னமேயே வயோலாவின் உயிர்காத்த கப்பற் தலைவன் ஸெபாஸ்டியன் நீந்திக் கரைமுகஞ் சென்றதைப் பார்த்ததாகச் சொன்னனல்லவா? அது அவளைத் தேற்றுவதற்காகச் சொன்னப் பொய்வார்த்தையல்ல. இயற்கையிலேயே மனத்தைரிய முள்ளவளாகையால் மனங் கலங்கி கடலுள் மூழ்காது ஓர் பலகைத் துண்டை கையிற்பற்றி அதனுதவியால் வெகுதூரம் நீந்திச் சென்றபிறகு அப்பக்கம் சென்று கொண்டிருந்த ஓர் கப்பல் அவனது நிலைமையைக் கண்டு அருகில்வந்து உதவி புரிந்தது. அவர்களும் இல்லிரியா தேசத்திலேயே இறங்கினார்கள். அச் சுந்தர புருடனது உருவமும், சாதுர்யமான பேச்சும், சிறந்த குணமும் இப்பொழுது அவனுக்கு மிகுந்த உதவியாயிருந்தது. ஏனெனில் அக்கப்பல் தலைவன் அவனைக் கண்டதுமுதல் அவனிடத்தில் மிகுந்த பிரியங் கொண்டவனாய் உபசரித்துவந்தான். இருவரும் நெருங்கிய சிநேகிதரைப்போலாயினர். ஸெபாஸ்டியன் உள் நாட்டில் எங்கேயாவதுபோய் எவ்விதமாவது பிழைக்கக் கருதித் தன் நண்பனிடம் விடைபெற்றுச் செல்லலாமென்றெண்ணி அவனிடஞ் சொன்னபோது அவன் பிரியமனதில்லாமல் ஸெபாஸ்டியன் சென்றவிடமெல்லாம் தானுங்கூடவருவனென்றான். அதை ஸெபாஸ்டியன் உறுதியுடன் தடுத்துரைக்க, அக்கப்பல் தலைவன் மிகுந்த வருத்தத்துடன் "நண்பா, இன்னமும் சிறிதுகாலம் என்னுடன்கூட இருக்கக்கூடாதா? அல்லது நானாவது உன்னுடன்வரக்கூடாதா? உன்பிரிவை யான் ஆற்றேன்." என்றான்.

"இரண்டும் சாத்தியமற்ற செய்கை. நீ என்மேல் கோபங்கொள்ளக் கூடாது. கொஞ்சகாலமாய் கலியின்தொடர்வு எனக்கு ஏற்பட்டுவிட்டதுபோலிருக்கின்றது. நீ என்னுடனே யிருந்தால் எனது துரதிர்ஷ்டவசம் உன்னையும் தீண்டினாலும் தீண்டும். அது எனக்கு சம்மதி இல்லை. என்னுடைய கஷ்டங்களை நானே யநுபவிக்கக் கடவேன். ஆகையால் நாம் பிரிவதே நலம்?"

"நீ எங்கு போகின்றாய் என்பதையாவது என்னிடம் சொல்லக்கூடாதா?"

"எனக்குப்போக இடம் என்ன உளது? என் கால்கள் எங்கு செலுத்துகின்றனவோ அங்குதான் நான்செல்வேன். நண்பா, உன்னுடைய குணம் மெச்சத்தக்கது. ஆவல் எவ்வளவு இருந்தபோதிலும் பிறர் தாமாகவே சொல்லாதவற்றை நீ வருத்திக்கேளாய். அப்படிப்பட்ட மித்ரனிடத்தி லிருந்து நான் ஒன்றும் ஒளிக்கக்கூடாது. ஆகையால் என் விருத்தாந்தத்தைக் கேள். நான் மெஸ்ஸலைன் நகரத்து வியாபிரி ஸெபாஸ்டியனது குமாரன். நீ என்னைக் கடலிலிருந்தெடுத்து உயிர்காத்ததற்கு சற்று நேரத்திற்கு முன் தான் என்னுடன் ஒரே காலத்தில் ஜெனித்த எனது செல்வ சகோதரி கடலுக்கு இறையாகி மாய்ந்தாள்—"

இனித் தன் துக்கத்தை யடக்க முடியாதவனாய் ஓவென்றலரி மண் மேல் வீழ்ந்து புரண்டான். அன்டோனியோ (கப்பற் தலைவன்) அவனை வாரியணைத்து 'இன்றைக் கிருந்தாரை நாளைக்குக் காணோம்' என்னும் கீர்த்தி வாய்ந்ததன்றோ இவ்வுலகு.

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு."

இதற்காக வியாகூலப் பட்டுப் பயன் உண்டோ" என்று சொல்லிப் பல வாறாகத் தேற்றினான். அதன்பின் ஸெபாஸ்டியன் தன் சிநேகிதனிடம் சொல்லிவிட்டு தனியே சென்றிடவே அன்டோனியோ அவனைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டாது அவன் போய் சிறிது நேரத்திற் கெல்லாம் அவனைத் தொடர்ந்து சென்று "நீ கோபித்துக் கொள்ளினும் காரியமில்லை. நான் உன்னுடனேயே வருவேன். இந்த அன்னிய தேசத்தில் துணையில்லாமல் போனால் எவ்வளவோ ஆபத்துக்களுக்குள்ளாக வேண்டியிருக்கும். ஆகையால் இருவரும் சேர்ந்திருப்பதே நலம். ஆனாலும் எனக்கும் இந்நாட் டரசனுக்கும் முன் ஒரு கப்பல் சண்டையில் விரோதமுண்டாக நான் இந் நாட்டினின்றும் துறத்தப்பட்டேன். ஆகையால் நான் உன்னுடன் வெளியே வர முடியாது. அரச சேவகர்கள் காண்பின் தண்டனைக் குள்ளாக்குவார். அதுபற்றி நான் ஊர்கோடியிலிருக்கும் சத்திரத்திலிருக்கின்றேன். என்பணப்பையைப் பெற்றுக்கொண்டு உனக்கு வேண்டியவைகளை வாங்கினபின் சீக்கிரம் அங்குவா. நான் காற்றுக்கொண் டிருப்பேன்" என்றான். ஸெபாஸ்டியன், "ஆகட்டும்" என்றுசொல்லி பணத்தைப் பெற்றுக்கொண்டு நெடுகச் சுற்றிப் பார்க்கலாமென்றெண்ணி நகர்க்குள் பிரவேசித்தான்.

(இன்னும் வரும்)

என். கலியாணசுந்திரம்.